9. ஆட்டோகேடில் பின்வருபவனவற்றின் செயல்பாடுகளை எழுதுக.

   அ. ESC – சாவி

   ஆ. நுழைவு விசை (Enter Key)

   இ. மேல் மற்றும் கீழ நோக்கு அம்புகுறிகள் (Arrow up and Arrow down)

   ஈ. ஆட்டோ கேடில் அமைவு கட்டளைகளை பற்றி (Setup commands) விவரி.

பகுதி இ

III. ஒரு பக்க அளவில் விடையளி:

(5 மதிப்பெண்கள்)

10. ஏதேனும் ஐந்து ஆப்ஜெக்ட் ஸ்னாப் (Object Snap) பற்றி மற்றும் அதனுடைய பயன்பாடுகளை விவரி?

11. முழுமையான மற்றும் அதிகரிக்கக் கூடிய அச்சு அமைவு குறிப்புகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் ஒப்பிட்டு விவரி?

12. ஆட்டோ கேடில் அடுக்குகளின் முக்கியவத்தை விளக்குக. அடுக்குகளை பயன்படுத்தி கோட்டின் வகையை வரையறுத்தல் எவ்வாறு?

பகுதி ஈ

IV விரிவான விடையளி: (10 மதிப்பெண்கள்)

13. ஆட்டோகேடில் பயன்படுத்தப்படும் பல்வேறு விசைப்பலகை குறுக்கு வழிகள் பற்றி விவரி.

14. ஆட்டோகேட் பரிமாணத்தில் பகுதிகள் (Pants), வகைகள் (Types) மற்றும் முறைகள் (Methods) பற்றி விவரி.

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 52 02/05/2022 17:33:14

பாடம்

4

தர நிர்ணயம்

கற்றலின் நோக்கம்

- தர நிர்ணயம், பொருந்தும் தன்மை மற்றும் இணைப்புகள் குறித்து அறிந்து கொள்ளுதல்.
- சர்வதேச தர நிர்ணய நிறுவனம் மற்றும் இந்திய தர நிர்ணய நிறுவனம் ஆகியவை பற்றியும் அவற்றின் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

4.1. அறிமுகம்

4.2. தர நிர்ணயம்

4.3. பொருந்தும் தன்மை

4.4. இணைப்புகள்

4.5. சர்வதேச தர நிர்ணய நிறுவனம்

4.6. இந்திய தர நிர்ணய நிறுவனம்

4.1. அறிமுகம்

நாம் ஒரு இயந்திரத்தை தயாரிக்க ஆயிரக்கணக்கான உதிரி பாகங்கள் தேவைப்படுகிறது. இந்த பாகங்களை வெவ்வேறு வகையான பொருட்களில் இருந்து தயாரிக்கின்றோம். இந்த பல்வேறு பாகங்கள் பல இயந்திரங்களில் உருவாக்கப்பட்டு ஒன்றிணைக்கப்படுகிறது. இப்பாகங்கள் கடைசல் இயந்திரம், துளையிடும் இயந்திரம், உருவமைக்கும் இயந்திரம், மில்லிங் இயந்திரம், அரைப்பு இயந்திரம் போன்ற வழக்கமாக பயன்படுத்தும் இயந்திரங்களின் மூலமாக உருவாக்கப்படுகிறது. தற்காலத்தில் CNC இயந்திரம் மற்றும் NC இயந்திரம் ஆகிய நவீன இயந்திரங்களின் வருகையால், உற்பத்தி நேரம் குறைந்து மிக உயர்ந்த தரம் மற்றும் நுணுக்கத்துடன் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மனித சக்தி குறைக்கப்பட்டு, இயந்திர சக்தி அதிகரிக்கப்பட்டு மிக உயர்ந்த தரத்துடன் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு பொருளின் நுணுக்கம் மற்றும் தரம் என்பது அதை தயாரிக்கும் இயந்திரத்தில் உள்ள பாகங்கள் மற்றும் உபகரணங்கள் எவ்வளவு துல்லியமாக உள்ளன என்பதையும், வெட்டுளியின் கோணம் எவ்வளவு துல்லியமாக சாணை பிடிக்கப்பட்டுள்ளது என்பதையும் பொறுத்தது. ஆனால் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும்பொழுது, எல்லா பொருட்களின் அளவும், ஒரே மாதிரியான துல்லியம் அமைவது மிகவும் கடினம். எனவே உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரே மாதிரியான பொருளுக்கு, அதிகபட்ச எல்லை மற்றும் குறைந்தபட்ச எல்லை கொடுக்கப்பட்டு (டாலரன்ஸ்) அதனடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் பொழுது தேவையான இணைப்பு தரத்துடன் பொருட்கள் அதிக அளவில் கிடைக்கின்றது. இந்த இணைப்பு தரம் உலக அளவில் பின்பற்றப்படுவதால், வணிகம் செய்வது எளிதாகிறது.

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 53 1/25/2023 4:57:49 PM

4.2. தர நிர்ணயம் (STANDARDIZATION)

பொதுவாக வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் (Protocol) அடிப்படையில் உலகில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரே மாதிரியான பொருட்களுக்கு தரம் மற்றும் அளவுகளை நிர்ணயம் செய்யும் முறைக்கு "தர நிர்ணயம்" என்று பெயர்.

தர நிர்ணயம் என்பதை வரையறை செய்யும் பொழுது அதில் பொருட்களின் அளவு, தரம், செயல்முறை, வடிவமைப்பு, எடை, நிறம், டாலரன்ஸ், அலவன்ஸ் போன்ற அனைத்தும் அடங்கும். பொருட்களின் தரம் சீராக அமைவதை தர நிர்ணயம் உறுதி செய்கிறது.

4.3. பொருந்தும் தன்மை (INTERCHANGEABILITY)

ஒரு இயந்திரத்தின் பாகம் உடைந்து விட்டாலோ அல்லது பயன்படுத்தி தேய்ந்து விட்டாலோ, அதை அகற்றி விட்டு புதிதாக ஒன்றை பொருத்தும் பொழுது அப்பொருள் எந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டதாக இருந்தாலும் அல்லது எந்த நாட்டில், எந்த மாநிலத்தில் வாங்கியிருந்தாலும் நாம் பொருத்த வேண்டிய இயந்திரத்தில் சரியாக எளிதாக பொருந்த வேண்டும்.

இதற்குப் பணிப்பொருளின் உண்மையான அளவிற்கோ அல்லது அதை விட சிறிது கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ, மிகக் குறைந்த வித்தியாசத்தில் கொடுக்கப்பட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் அப்பொருள் அதனோடு இணைய வேண்டிய பொருளுடன் மிகச் சரியாக இணையும்.

கொடுக்கப்பட்ட அளவு வேறுபாடுகளுக்கேற்ப அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச எல்லைகளுக்குள் பொருட்களை உற்பத்தி செய்தால் மட்டுமே அது இணைய வேண்டிய பொருட்களுடன் நுணுக்கத்துடன் மிகச் சரியாக இணையும். இத்தன்மைக்கு "பொருந்தும் தன்மை" (Interchangeability) என்று பெயர்.

4.3.1. 'பொருந்தும் தன்மை'யினால் ஏற்படும் நன்மைகள்

1. பொருட்கள் குறிப்பிட்ட எல்லை அளவுக்குள் தயாரிக்கப்படுவதால், அது பொருந்த வேண்டிய பாகத்துடன் எளிதில் ஒன்றுடன் ஒன்று பொருந்துகிறது.
2. பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் (Mass production) பொருட்களில், வீணாகும் பொருட்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கம்.
3. இயந்திர பாகங்களை ஒன்றுடன் ஒன்று பொருத்தும் போது, அது எடுத்துக் கொள்ளும் நேரம் குறைகிறது. இதை குறை திறன் (Unskilled worker) பணியாளர்களும் செய்ய முடிவதால் அதற்கான செலவும் குறைகிறது.
4. குறைந்த நேரத்தில் அதிக அளவு பொருத்தப்படுவதால் அப்பொருளின் உற்பத்தி விலை (Production cost) குறைகிறது.



படம் 4.1 பொருந்தும்தன்மையின் அமைப்பில் பயன்படுத்தும் துறைச்சொற்கள்

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 54 1/25/2023 4:57:49 PM

4.3.2 பொருந்தும்தன்மையின் அமைப்பில் பயன்படுத்தும் துறைச்சொற்கள்

துறைச்சொற்கள்	விளக்கம்
அச்சு (Shaft)	அச்சு என்பது உருளை வடிவமான ஒரு பொருளின் வெளி விட்டத்தைக் குறிப்பதாகும்.
துளை (Hole)	மையத்தில் துளையுடைய ஒரு பொருளின் உள் விட்டத்தைக் குறிப்பதாகும்.
ஆதார அளவு (Basic Size)	ஆதார அளவு என்பது ஒரு பொருளின் உயர்ந்தபட்ச எல்லையையும், குறைந்தபட்ச எல்லையையும் குறிப்பிடுவதற்கு ஆதாரமாக உள்ள அளவாகும். அதாவது ஏற்கப்படும் அளவு (Tolerance) தரப்படாத பொருளின் உண்மையான அளவைக் குறிக்கும்.
இருக்கும் அளவு (Actual Size)	ஒரு பொருளின் உற்பத்தி செய்து முடித்த பிறகு இருக்கக்கூடிய அளவிற்கு "இருக்கும் அளவு" (Actual Size) என்று பெயர்.
அளவின் எல்லை – லிமிட் (Limit of Size)	மிகச் சரியான அளவிற்கு எந்த பொருளையும் தயாரிப்பது என்பது கடினம். எனவே உற்பத்தி செய்யப்படும் பொருள் குறிப்பிட்ட இரு எல்லை அளவுகளுக்குள் இருக்கும்படி தயார் செய்வது எளிது. அந்த எல்லைகள் உண்மையான அளவைவிட சற்று அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் படி தயார் செய்ய அனுமதிக்கப்படுகிறது. சற்று அதிகமாக உள்ள அளவை உயர்ந்தபட்ச எல்லை எனவும், சற்று குறைவாக உள்ள அளவை குறைந்தபட்ச எல்லை எனவும் அழைக்கிறோம்.
மாறுபாடு (Deviation)	மாறுபாடு (Deviation) என்பது ஆதார அளவிற்கும், இருக்கும் அளவிற்கும் உள்ள வித்தியாசமாகும்.
பெரும மாறுபாடு (Upper Deviation)	பெரும மாறுபாடு (Upper Deviation) என்பது ஆதார அளவிற்கும், உயர்ந்தபட்ச எல்லைக்கும் உள்ள வித்தியாசமாகும்.
குறும மாறுபாடு (Lower Deviation)	குறும மாறுபாடு (Lower Deviation) என்பது ஆதார அளவிற்கும், குறைந்தபட்ச எல்லைக்கும் உள்ள வித்தியாசமாகும்.
பூஜ்யக்கோடு (Zero line)	அளவின் எல்லை அளவுகள், இணைப்பின் தரம் ஆகியவற்றை வரைபட த்தில் விளக்கும் போது, ஆதார அளவை குறிக்கும் கோட்டிற்கு பூஜ்யக்கோடு என்று பெயர். பூஜ்யக்கோட்டிற்கு மேலே உள்ள பகுதியை கூடுதல் பக்கம் (Positive Side) என்று கூறுவர் அதில் குறிக்கப்படும் அளவுகளுடன் (+) என்ற அடையாளக்குறி சேர்த்துக் கொள்ளப்படுகிறது. பூஜ்யக்கோட்டிற்கு கீழே உள்ள பகுதி குறைவு பக்கம் (Negative Side) என்று கூறப்படுகிறது. இதில் குறிக்கப்படும் அளவுகளுடன் (–) என்ற அடையாளக்குறி சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

4.3.3. ஏற்கப்படும் அளவுவேறுபாடு (Tolerance)

உயர்ந்தபட்ச எல்லை, குறைந்தபட்ச எல்லை ஆகிய இரண்டு அளவுகளுக்கும் உள்ள வித்தியாசத்திற்கு "ஏற்கப்படும் அளவு" என்று பெயர். ஏற்கப்படும் அளவு வேறுபாட்டைக் குறிப்பிடுவதில் இரு வகைகள் உள்ளன.

1. ஒருமுக ஏற்கப்படும் அளவு வேறுபாடு முறை (Unilateral Tolerance)
2. இருமுக ஏற்கப்படும் அளவு வேறுபாடு முறை (Bilateral Tolerance)

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 55 1/25/2023 4:57:49 PM

ஒருமுக ஏற்கப்படும் அளவு வேறுபாடு முறை (Unilateral Tolerance): ஏற்கப்படும் அளவு வேறுபாடு முழுவதும் ஆதார அளவிலிருந்து கூடுதல் பக்கமாக அல்லது குறைவு பக்கமாக மட்டும் கொடுக்கப்பட்டால் அதற்கு ஒருமுக வேறுபாடு முறை என்று பெயர்.

எடுத்துக்காட்டு:

பாகத்தின் அளவு	ஆதார அளவு	அதிகபட்ச வரம்பு	குறைந்தபட்ச அளவு
$20^{+0.02}_{-0.00}$	20.00mm	20.02 mm	20.00mm
$20^{+0.00}_{-0.02}$	20.00mm	20.00 mm	19.98 mm

இருமுக ஏற்கப்படும் அளவு வேறுபாடு முறை (Bilateral Tolerance): ஏற்கப்படும் அளவு வேறுபாடு முழுவதும் ஆதார அளவிலிருந்து கூடுதல் பக்கம், குறைவு பக்கம் ஆகிய இரண்டு பக்கமும் இருக்கும்படி கொடுக்கப்பட்டால் அதற்கு இருமுக வேறுபாடு முறை என்றுபெயர்.

எடுத்துக்காட்டு:

பாகத்தின் அளவு	ஆதார அளவு	அதிகபட்ச வரம்பு	குறைந்தபட்ச அளவு
$35^{+0.02}_{-0.02}$	35.00mm	35.02mm	34.98mm

4.4. இணைப்பு (FITS)

இரண்டு பாகங்களை ஒன்றுடன் ஒன்று பொருத்தும் போது அவை குறிப்பிட்ட பிடிப்புடனோ அல்லது தளர்ச்சியுடனோ இணைந்து பொருந்திக் கொள்ளும். இதனை 'இணைப்பு' என்கிறோம்.

4.4.1. இணைப்பின் வகைகள்

அச்சு மற்றும் துளையின் அளவைப் பொறுத்து, பாகங்கள் இணையும் பொழுது வெவ்வேறு வகைகளில் இணைகின்றன. அவற்றை கீழ்கண்ட மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. இடைவெளியுள்ள இணைப்பு (Clearance fit)
2. அழுத்த இணைப்பு (Interference fit)
3. இடைவெளியற்ற இணைப்பு (Transition fit)

இடைவெளியுள்ள இணைப்பு (Clearance fit)

அச்சின் அளவை விட, துளையின் அளவு அதிகமாக இருந்தால், அந்த இணைப்பு "இடைவெளியுள்ள இணைப்பு" என அழைக்கப்படுகிறது. இதில் அதிகபட்ச இடைவெளி மற்றும் குறைந்தபட்ச இடைவெளி என இரண்டு நிலைகள் காணப்படுகிறது.

அச்சின் விட்டம் குறைவாகவும், துளையின் விட்டம் அதிகமாகவும் இருப்பின், அந்த இணைப்பு 'அதிகபட்ச இடைவெளி' கொண்டதாக இருக்கும். அச்சின் விட்டம் அதிகமாகவும் துளையின் விட்டம் குறைவாகவும் இருப்பின் அந்த இணைப்பு 'குறைந்தபட்ச இடைவெளி' கொண்டதாக இருக்கும்.

எடுத்துக்காட்டு: புஷ் தாங்கி(Bearing) மற்றும் சேனல் தாங்கி இந்த வகை இனைப்புகள் இனணக்கப்பட்டு இருக்கும்.



படம் 4.2 இடைவெளியுள்ள இணைப்பு (Clearance fit)

அழுத்த இணைப்பு (Interference Fit)

அச்சின் அளவை விட, துளையின் அளவு குறைவாக இருந்தால், அந்த இணைப்பு 'அழுத்த இணைப்பு' என அழைக்கப்படுகிறது. மேலும் இது பிரஸ் பிட் (Press fit) எனவும் உராய்வு இணைப்பு (Friction fit) எனவும் அழைக்கப்படுகிறது. இதில் அதிகபட்ச அழுத்தம் மற்றும் குறைந்தபட்ச அழுத்தம் என இரண்டு நிலைகள் காணப்படுகிறது.



படம் 4.3 அழுத்த இணைப்பு (Interference Fit)

துளையின் விட்டம் குறைவாகவும், அச்சின் விட்டம் அதிகமாகவும் இருப்பின் அந்த இணைப்பு

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 56 1/25/2023 4:57:50 PM

"அதிகபட்ச அழுத்தம்" கொண்டதாக இருக்கும். துளையின் விட்டம் அதிகமாகவும், அச்சின் விட்டம் குறைவாகவும் இருப்பின் அந்த இணைப்பு "குறைந்தபட்ச அழுத்தம்" கொண்டதாக இருக்கும்.

இடைவெளியற்ற இணைப்பு (Transition fit)

அச்சின் அளவும், துளையின் அளவும் சமமாக இருப்பின் அந்த இணைப்பு "இடைவெளியற்ற இணைப்பு" என அழைக்கப்படுகிறது. மேலும் இது 'நழுவு இணைப்பு' (Slip fit) அல்லது தள்ளு இணைப்பு (Push fit) எனவும் அழைக்கப்படுகிறது. இந்த இணைப்பானது இடைவெளியுள்ள இணைப்பு மற்றும் அழுத்த இணைப்பு ஆகிய இரண்டு இணைப்புகளுக்கும் இடைப்பட்ட நிலையுடைய இணைப்பாகும். இணைப்பின் நுணுக்கம் முக்கியமாக இருக்க வேண்டிய இடங்களில், இந்த இடைவெளியற்ற இணைப்பு ஏற்றதாகும்.



படம் 4.4 இடைவெளியற்ற இணைப்பு (Transition fit)



4.4.2. இணைப்பின் அமைப்பு முறைகள் (Systems of fit)

இணைப்பின் அமைப்பு முறையை தேர்ந்தெடுப்பதற்கு அச்சு மற்றும் துளை ஆகிய இரண்டில் ஒன்றை நிலையான அளவு கொண்டதாகவும், மற்றொன்றை மாறுபடும் அளவு கொண்டதாகவும் இருக்குமாறு வைத்துக் கொள்ள வேண்டும்.

நிலையான அளவு கொண்ட பொருத்தும் பாகத்தைப் பொறுத்து, அவை இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது.

துளை அடிப்படை அமைப்பு முறை (Hole basis system)

கொடுக்கப்பட்ட துளையின் அளவு நிலையானதாகவும், அச்சின் அளவு மாறுபாடு கொண்டதாகவும் இருப்பின், அது "துளை அடிப்படை அமைப்பு முறை" என அழைக்கப்படுகிறது. இதில் அச்சின் குறும மற்றும் பெரும மாறுபாட்டை பொருத்து, இணைப்பின் வகை முடிவு செய்யப்படுகிறது. துளை அடிப்படை அமைப்பு முறையில், துளையின் குறும மாறுபாடு பூஜ்ஜியம் ஆகும்.

எடுத்துக்காட்டு

துளையின் ஆதார அளவு = 36 mm
துளை = 36.000 / 36.015
(இடைவெளியுள்ள இணைப்பு) அச்சு
= 35.980 / 35.990
அதிகபட்ச இடைவெளி = 0.035
குறைந்தபட்ச இடைவெளி = 0.010
(இடைவெளியற்ற இணைப்பு) அச்சு
= 35.990 / 36.010
அதிகபட்ச இடைவெளி = 0.030
அதிகபட்ச அழுத்தம் = 0.010
(அழுத்த இணைப்பு) அச்சு = 36.010 / 36.020
அதிகபட்ச அழுத்தம் = 0.020
குறைந்தபட்ச அழுத்தம் = 0.005

அச்சு அடிப்படை அமைப்பு முறை (Shaft basis system)

கொடுக்கப்பட்ட அச்சின் அளவு நிலையானதாகவும், துளையின் அளவு மாறுபாடு கொண்டதாகவும் இருப்பின் அது "அச்சு அடிப்படை அமைப்பு முறை" என அழைக்கப்படுகிறது. இதில் துளையின் குறும மற்றும் பெரும மாறுபாட்டைப் பொருத்து, இணைப்பின் வகை முடிவு செய்யப்படுகிறது. அச்சு அடிப்படை அமைப்பு முறையில், அச்சின் பெரும மாறுபாடு பூஜ்ஜியம் ஆகும்.

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 57 1/25/2023 4:57:50 PM



துளை அடிப்படை அமைப்பு முறை

அச்சு அடிப்படை அமைப்பு முறை

1. இடைவெளியுள்ள இணைப்பு, 2. இடைவெளியற்ற இணைப்பு 3.. அழுத்த இணைப்பு

எடுத்துக்காட்டு

அச்சின் ஆதார அளவு= 25 mm
அச்சு = 24.985 / 25.000

(இடைவெளியுள்ள இணைப்பு) துளை
= 25.010 / 25.020
அதிகபட்ச இடைவெளி = 0.035
குறைந்தபட்ச இடைவெளி = 0.010

(இடைவெளியற்ற இணைப்பு) துளை
= 24.990 / 25.010
அதிகபட்ச இடைவெளி = 0.025
அதிகபட்ச அழுத்தம் = 0.010

(அழுத்த இணைப்பு) துளை = 24.980 / 24.990
அதிகபட்ச அழுத்தம் = 0.020
குறைந்தபட்ச அழுத்தம் = 0.005

மேற்கண்ட இரண்டு இணைப்பு அமைப்பு முறைகளில் "துளை அடிப்படை அமைப்பு முறையே" பெரும்பாலும் செயல்படுத்தப்படுகிறது. ஏனெனில் இம்முறையில் அச்சின் அளவை அரைப்பு செயல் செய்தோ அல்லது கடைசல் செய்தோ சரிசெய்து கொள்ளலாம். ஆனால் அச்சு அடிப்படை அமைப்பு முறையில், துளையின் அளவை அரைப்பு செயல் அல்லது கடைதல் மூலம் சரிசெய்ய இயலாது.

4.5. சர்வதேச தர நிர்ணய நிறுவனம் (ISO)

வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுவான வரையறைகளை நிர்ணயம் செய்வதில் சர்வதேச தர நிர்ணய நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் மூலம் நாடுகளுக்கு இடையே வணிகம் செய்வது எளிதாகிறது. பொருட்களின் சிறந்த தரம், நம்பகத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை ISO உறுதி செய்கிறது.

ISOவின் பணிகள்

1. தொழில்நுட்ப மேம்பாட்டின் உதவியுடன் பொருட்களை மிகுந்த திறமையுடனும், பாதுகாப்புடனும், தரத்துடனும் உற்பத்தி செய்ய உதவி செய்தல்.
2. நாடுகளுக்கிடையே சுலபமாக வணிகம் செய்ய சந்தைகளை ஏற்படுத்துதல்.
3. சுகாதாரம் மற்றும் உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த தொழில்நுட்ப ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு அளித்தல்.

4.6. இந்திய தர நிர்ணய நிறுவனம் (BIS)

தேசிய அளவில் பொருட்களுக்கு தர நிர்ணயம் செய்ய உருவாக்கப்பட்ட நிறுவனம் "இந்திய தர நிர்ணய நிறுவனம்" (BIS) ஆகும். (இதன் பழைய பெயர் ISI – Indian Standards Institution ஆகும்). இதன் முக்கிய நோக்கம், தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கும், வீட்டு உபயோகப் பொருட்களுக்கும் தரம் மற்றும் அளவுகளை நிர்ணயம் செய்வதாகும்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீது ISI குறியீட்டை காணலாம். இது BIS நிறுவனத்தால் கொடுக்கப்படும் தரச்சான்று ஆகும். தங்கள் பொருட்களின் தரத்தை நிரூபிக்க, உற்பத்தியாளர்கள் இச்சான்றை BIS நிறுவனத்திடம் பெற வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 58 1/25/2023 4:57:50 PM

'BIS' நிறுவனம், இந்திய தர நிர்ணய சட்டம் 1986ன்படி நிறுவப்பட்டது. 1986ம் வருடம் டிசம்பர் 23ம் நாள் முதல் BIS நிறுவனம் செயல்பட ஆரம்பித்தது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு இந்நிறுவனம் தர நிர்ணயம் செய்து, தர உறுதியையும் தரச் சான்றையும் அளிக்கிறது.

BIS–ன் பணிகள்

1. BIS நிறுவனம், தொழிற்சாலை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கு தேசிய அளவில் தர நிர்ணயம் செய்கிறது.
2. இந்த தரச் சான்றின் அடையாளமாக ISI என்ற குறியீட்டை வழங்குகிறது.
3. உபயோகிப்பாளர் (Consumer) பயன்படுத்தும் எந்த ஒரு பொருளின் தரம், நம்பகத் தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்கிறது.

செயல்பாடுகள்

- அருகிலுள்ள தொழிற்சாலைக்கு சென்று அங்கு தர ஆய்வு துறை (Inspection Department) எவ்வாறு செயல்படுகிறது என்பதை கவனிக்கவும்.
- பேனாவை உதிரி பாகங்களாக பிரித்து அவற்றை மீண்டும் ஒன்றிணைக்கவும்.

சொற்களஞ்சியம்

Standardization	தரநிர்ணயம்
Interchangeability	பொருந்தும் தன்மை
Tolerance	அளவு வேறுபாடு
International Organisation for Standardization (ISO)	சர்வதேச தரநிர்ணய நிறுவனம்
Bureau of Indian Standards (BIS)	இந்திய தரநிர்ணய நிறுவனம்

வினாக்கள்

பகுதி–அ

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

(1 மதிப்பெண்)

1. கொடுக்கப்பட்ட பணிப்பொருள் அதனோடு இணைய வேண்டிய பொருளுடன் இணைவதற்காக, பணிப்பொருளின் உண்மையான அளவிற்கோ அல்லது மிகக் குறைந்த வித்தியாசத்தில் கொடுக்கப்பட்ட எல்லைக்குள் இருக்கும்படி செய்யும் முறையின் பெயர்

   அ) லிமிட்ஸ் ஆ) ஒரு முக வேறுபாடு

   இ) மாறுபாடு ஈ) பொருந்தும் தன்மை

2. அச்சின் அளவை விட, துளையின் அளவு குறைவாக உள்ள இணைப்பு

   அ) அழுத்த இணைப்பு

   ஆ) இடைவெளியுள்ள இணைப்பு

   இ) இடைவெளியற்ற இணைப்பு

   ஈ) நழுவு இணைப்பு

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 59 1/25/2023 4:57:50 PM

3. அச்சின் அளவை விட, துளையின் அளவு அதிகமாக உள்ள இணைப்பு

அ) அழுத்த இணைப்பு

ஆ) இடைவெளியுள்ள இணைப்பு

இ) இடைவெளியற்ற இணைப்பு

ஈ) நழுவு இணைப்பு

4. ஆதார அளவிற்கும், இருக்கும் அளவிற்கும் உள்ள வித்தியாசம்

அ) அதிகபட்ச எல்லை

ஆ) மாறுபாடு

இ) ஏற்கப்படும் அளவு வேறுபாடு

ஈ) குறைந்தபட்ச எல்லை

5. இணைப்பின் நுணுக்கம் மிக முக்கியம் எனில், எவ்வகையான இணைப்பை தேர்ந்தெடுப்பாய்?

அ) அழுத்த இணைப்பு

ஆ) இடைவெளியுள்ள இணைப்பு

இ) இடைவெளியற்ற இணைப்பு

ஈ) உராய்வு இணைப்பு

பகுதி –ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்க.

(3 மதிப்பெண்கள்)

6. "பொருந்தும் தன்மை" என்றால் என்ன?
7. "அளவின் எல்லை" என்றால் என்ன?
8. "இணைப்பு" என்றால் என்ன?
9. "ஆதார அளவு" என்றால் என்ன?
10. மாறுபாட்டின் வகைகள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
11. ISO–வின் பணிகள் யாவை?
12. BIS–ன் பணிகள் யாவை?

பகுதி – இ

ஒரு பக்க அளவில் விடையளி.

(5 மதிப்பெண்கள்)

13. "ஏற்கப்படும் அளவு வேறுபாடு" என்றால் என்ன? அவற்றின் வகைகளை விளக்குக.
14. இணைப்பின் அமைப்பு முறைகள் (System of fit) பற்றி விளக்குக.

பகுதி – ஈ

விரிவான விடையளி **(10 மதிப்பெண்கள்)**

15. "பொருந்தும் தன்மை" பற்றிய விளக்கத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய துறைச்சொற்கள் நான்கினை விளக்குக.
16. இணைப்பின் வகைகள் மூன்றினைப் பற்றி விளக்குக.

XI_TM_BME_Tamil_Chapter04_2022.indd 60 1/25/2023 4:57:50 PM

பாடம்
5

வார்ப்பகம்



கற்றலின் நோக்கம்

- வார்ப்பகம், வார்ப்பகத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள், மாதிரி வடிவப் பொருட்கள், அதன் வகைகள், அச்சுக்கருவிகள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- அச்சு மணல் பண்புகள் மற்றும் அச்சின் வகைகள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

5.1. அறிமுகம்

5.2. மாதிரி வடிவம்

5.3. அச்சு

5.4. உள்ளகம்

5.1. அறிமுகம்

ஒரு பொருளை தேவையான வடிவத்தில் தயாரிக்க பல்வேறு உற்பத்தி முறைகள் உள்ளது. வார்ப்பு செய்தல் (Casting) என்பது சிக்கலான வடிவமைப்புடைய பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்யப்பயன்படும் செயல்முறை (process) ஆகும். இம்முறையில் உலோகம் திரவ நிலைக்கு கொண்டு வரப்பட்டு தேவையான உருவம் கொண்ட அச்சுகளில் (Mould) ஊற்றப்படுகிறது. அவை குளிர்ந்த பின்னர் கிடைக்கும் பொருள் வார்ப்பு (Casting) ஆகும். மாதிரி அச்சு (Mould) என்பது அச்சு மண்ணில் (Moulding Sand) அல்லது வேறு உலோகத்தில் தேவையான உருவத்தில் உண்டாக்கப்படும் குழியை (Cavity) குறிக்கிறது. அச்சுக் குழியை உண்டாக்க அச்சுப் பெட்டி (Moulding Box), மாதிரி உருவம் (Pattern), அச்சுக் கருவிகள் (Moulding Tools), அச்சுமண் (Moulding Sand) ஆகியவை தேவைப்படுகின்றன.

மாதிரி வடிவம் (Pattern) என்பது மரம், உலோகம் (அல்லது) பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட பொருளின் மாதிரி உருவமாகும். இது மணலில் அச்சுக் குழியை (Module Cavity) உண்டாக்கப்பயன்படுகிறது.

வார்ப்பகம் என்பது அச்சுக்களை உருவாக்கி உலோகத்தை உருக்கி அதை அச்சுக்களில் (Mould) ஊற்றி வார்ப்புகளை (Casting) உருவாக்கும் இடத்தைக் குறிக்கிறது.

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 61 1/31/2023 12:08:26 PM



வார்ப்பு செய்தல்

5.2. மாதிரி வடிவம் (PATTERN)

மாதிரி வடிவம் என்பது மரம், உலோகம் அல்லது பிளாஸ்டிக்கால், நமக்கு தேவையான வடிவத்தில் செய்யப்பட்ட உருவமே மாதிரி வடிவம் ஆகும். மாதிரி உருவம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பின்வருமாறு

5.3 மாதிரி வடிவப் பொருட்கள் (PATTERN MATERIALS)

- மரம் (wood)
- உலோகம் (Metal)
- பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (Plaster of Paris)
- பிளாஸ்டிக் (Plastic)
- மெழுகு (wax)

மரம் (wood)

மாதிரி உருவம் (Pattern) தயாரிக்க அதிக அளவில் மரம் பயன்படுகிறது. பொதுவாக தேக்கு (Teak), மாஹோகனி (Mahogany), பைன் (Pine), ரோஸ்வுட் (Rose wood) போன்ற மரங்கள் பயன்படுகிறது. உலோகப் பூச்சுகள் (Metal Spray) கொடுத்து மேற்பரப்பின் தன்மை மற்றும் ஆயுளை (Life) அதிகரிக்கலாம். துத்தநாகம், அலுமினியம் போன்ற உலோகங்களை பயன்படுத்தி மாதிரி வடிவங்ளில் 2.5மி.மீ. தடிமனுக்கு உலோகப் பூச்சு கொடுக்கலாம்.

உலோகம் (Metal)

அதிக எண்ணிக்கையில் வார்ப்புகள்(Casting) தயாரிக்க உலோகத்தாலான மாதிரி வடிவங்கள் பயன்படுத்தப்படுகிறது .தலைமை மாதிரி (Master Pattern) வடிவத்தில் இருந்து மாதிரி வடிவம் தயாரிக்கப்படுகிறது. இந்த தலைமை மாதிரி வடிவம் மரத்தினால் தயாரிக்கப்படுகிறது. உலோக மாதிரி வடிவங்கள் தயாரிக்க, வார்ப்பிரும்பு (Cast Iron) பித்தளை (Brass) அலுமினியம் (Aluminium) வெள்ளை உலோகம் (White Metal) போன்றவை பயன்படுகிறது. சிறிய மாதிரி வடிவங்கள் தயாரிக்க பித்தளை (Brass) உலோகம் ஏற்றது. சிக்கலான மாதிரி வடிவங்கள் தயாரிக்க வெள்ளை உலோகம் (White Metal) பயன்படுத்தலாம்.

பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (Plaster of Paris)

பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்பது ஜிப்சம் சிமெண்ட் ஆகும். பிளாஸ்டர் ஆப் பாரிஸ் உடன் குறிப்பிட்ட அளவு தண்ணீர் சேர்த்து தலைமை மாதிரி வடிவத்தில் நிரப்பி தயாரிக்கப்படுகிறது. சிறிய மாதிரி வடிவங்கள் தயாரிக்க இது பயன்படுகிறது.

பிளாஸ்டிக் (Plastic)

பிளாஸ்டிக் மாதிரி வடிவங்கள் மரத்தால் செய்யப்பட்ட தலைமை மாதிரி வடிவத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தெர்மோ செட்டிங் மற்றும் தெர்மோ பிளாஸ்டிக் என இரண்டு வகையான பிளாஸ்டிக் பொருட்கள் மாதிரி வடிவங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன. குறைந்த எண்ணிக்கையிலான மாதிரி வடிவங்கள் உருவாக்க தெர்மோ பிளாஸ்டிக்

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 62 1/31/2023 12:08:27 PM

பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தெர்மோ செட்டிங் பிளாஸ்டிக்குகள் அதிக எண்ணிக்கையிலான மாதிரிவடிவங்கள்தயாரிக்கபயன்படுத்தப்படுகிறது.

மெழுகு (wax),

திரவ நிலையிலோ (Liquefied) அல்லது பாதி திரவ நிலையிலோ (Semi Solid) உள்ள மெழுகை பிளவுபட்ட அச்சில் (Split Die) செலுத்தி, குளிர்விக்கப்பட்டு, திறக்கப்பட்டு மெழுகு மாதிரி வடிவம் தயாரிக்கப்படுகிறது. இவ்வகை மாதிரி வடிவங்கள் அளவில் சிறியதாக இருக்கும். பாரஃபின் மெழுகு (Paraffin Wax), ஷெல்லாக்மெழுகு (Shellac Wax), பீஸ் மெழுகு (Bees Wax), செரெசின் மெழுகு (Ceresin Wax) மற்றும் மைக்ரோ கிரிஸ்டலின் மெழுகு (Microcrystalline wax) ஆகிய மெழுகு பொருட்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

5.2.2. மாதிரி வடிவம் செய்ய பயன்படும் மூலப்பொருட்களை தேர்ந்தெடுக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய குறிப்புக்கள்.

- உற்பத்தி செய்யப்படும் வார்ப்புகளின் எண்ணிக்கை
- வார்ப்பின் தரம்
- வார்ப்பின் அளவு மற்றும் வடிவம்
- அச்சு (Mould) மற்றும் வார்ப்பு தயாரிக்கும் முறைகள்
- வார்ப்பின் மேற்பரப்புத் தன்மை
- வார்ப்பின் நுணுக்கம்
- வார்ப்பு பொருட்களின் விலை
- சந்தையில் எளிதாக கிடைத்தல்
- உயர் வெப்பநிலை தாங்கும் தன்மை
- அச்சின் வடிவம் மாறாமை.

5.2.3. மாதிரி வடிவத்தின் வகைகள் (Types of Pattern)

வார்ப்பகங்களில் பயன்படுத்தப்படும் மாதிரி வடிவங்கள் (Pattern)

- கெட்டிமாதிரி வடிவம் (Single Piece Pattern / Solid Pattern)
- பிளவு மாதிரி வடிவம் (Split Pattern)
- மேட்ச் பிளேட் மாதிரி வடிவம் (Match plate Pattern)
- தளர்வு துண்டு மாதிரி வடிவம் (Loose Piece Pattern)

கெட்டிமாதிரி வடிவம் (Single Piece Pattern / Solid Pattern)

ஒரே துண்டால் ஆன இணைப்புகள் இல்லாமல் தயாரிக்கப்பட்ட மாதிரி வடிவத்திற்கு கெட்டிமாதிரி வடிவம் என்கிறோம். எளிய வடிவமுடைய சிறிய வார்ப்புகளை உருவாக்க இந்த முறை பயன்படுத்தப்படுகிறது. அச்சு மண்ணில் இருந்து (Moulding Sand) மாதிரி உருவத்தை (Pattern) எளிதாக எடுக்கலாம்.



கெட்டிமாதிரி வடிவம்
(Single Piece Pattern / Solid Pattern)

பிளவு மாதிரி வடிவம் (Split Pattern)

ஒரே துண்டால் ஆன மாதிரி வடிவங்கள் தயாரிக்கும் போது, அவற்றை அச்சிலிருந்து (Mould) ஒரே துண்டாக எடுக்க முடியாது. அது போன்ற சமயங்களில், பிளவு மாதிரி வடிவங்கள் (Split Pattern) பயன்படுத்தப்படுகிறது.



பிளவு மாதிரி வடிவம் (Split Pattern)

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 63 1/31/2023 12:08:27 PM

இவ்வகை மாதிரி வடிவங்கள் இரு பகுதிகளாக செய்யப்பட்டு எளிதில் பிரிக்கும் வகையில் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு பகுதி அச்சின் கீழ் பகுதியையும், மற்றொரு பகுதி அச்சின் மேல் பகுதியையும் உருவாக்குகிறது. இரு பகுதிகளும் டுவெல் பின் (Dowel Pin) மூலம் சரியாகப் பொருத்தப்படுகிறது. இவ்வகை பிளவு மாதிரி வடிவங்கள் மூன்று அல்லது நான்கு பிரிவுகளாக தயாரிக்கப்படுகிறது. இவை சிலிண்டர்கள், சுழற்றிகள், குழாய்கள் மற்றும் அச்சுக்கள் போன்ற சமச்சீரான வார்ப்பு செய்யப் பயன்படுகிறது.

மேட்ச் பிளேட் மாதிரி வடிவம் (Match Plate Pattern)

இவ்வகை மாதிரி வடிவங்களில் மேட்ச் பிளேட் உள்ளது, இது அலுமினியத்தால் செய்யப்பட்டிருக்கும். இதன் இரு பக்கமும் உலோகத்தினால் ஆன பிளவு மாதிரி வடிவம் (Split Metal Pattern) பொருத்தப்பட்டிருக்கும். மாதிரி வடிவத்தின் ஒரு பகுதி மேட்ச் பிளேட்டின் ஒரு பக்கமும், மறுபகுதி எதிரே உள்ள மற்றொரு மேட்ச் பிளேட்டிலும் பொருத்தப்படும்.



மேட்ச் பிளேட் மாதிரி வடிவம்
(Match Plate Pattern)

தளர்வு துண்டு மாதிரி வடிவம் (Loose Piece Pattern)

ஒரே துண்டினால் ஆன மாதிரி வடிவங்கள் தயாரிக்கும் போது, அவற்றை அச்சிலிருந்து (Mould) ஒரே துண்டாக எடுக்க முடியாது. எனவே கெட்டி மாதிரி வடிவத்துடன் தளர்வு துண்டு மாதிரி வடிவம் (Loose Piece Pattern) பொருத்தப்பட்டிருக்கும். இம்முறையில், அச்சு செய்து முடித்த பிறகு, முதலில் சாலிட் மாதிரி வடிவத்தை நீக்க வேண்டும், பிறகு அச்சுக்கு சேதமின்றி தளர்வு துண்டு மாதிரி வடிவத்தை எடுக்க வேண்டும். இவ்வகை மாதிரி வடிவங்கள் சிக்கலான பெரிய வடிவமைப்புள்ள வார்ப்புகள் தயாரிக்க பயன்படுகிறது.



தளர்வு துண்டு மாதிரி வடிவம்
(Loose Piece Pattern)

5.2.4. மாதிரி வடிவ அலவன்ஸ் (Pattern Making Allowance)

மாதிரி வடிவங்கள் வார்ப்பின் சரியான அளவிற்கு தயாரிக்கப்படுவதில்லை. மாதிரி வடிவங்கள் வார்ப்பின் அளவைவிட சற்று பெரியதாகவே செய்யப்படுகிறது. இந்த அளவு வேறுபாட்டிற்கு அலவன்ஸ் என்று பெயர். உலோகம் சுருங்கும் தன்மையை (shrinkage) நிவர்த்தி செய்யவும், உலோக வடிவ சிதைவு (distortion) ஏற்படுவதை தவிர்க்கவும், மாதிரி வடிவத்தை வெளியே எளிதில் எடுக்கவும் மாதிரி வடிவ அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

- சுருக்க அலவன்ஸ் (Shinkage Allowance)
- இயந்திர அலவன்ஸ் (Machine Allowance)
- இழு அலவன்ஸ் (Draft Allowance)
- வடிவ சிதைவு அலவன்ஸ் (Distortion Allowance)
- அழுத்த அலவன்ஸ் (Ramping Allowance)

5.3. அச்சு முறை (MOULDING PROCESS)

அச்சு முறை என்பது, உருகிய உலோகத்தை ஒரு அச்சுக்குள் ஊற்றுவதன் மூலம் விரும்பிய வடிவத்தை உருவாக்குதல் ஆகும். அவ்வாறு அச்சு உருவாக்கும் செயல்முறைக்கு வார்ப்பு (Moulding) என்று பெயர்.

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 64 1/31/2023 12:08:28 PM

5.3.1. வார்ப்பு கருவிகள் (Moulding Tools)

வார்பக சாலையில் (Foundary) கீழ்க்கண்ட வார்ப்பு கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. அவையாவன.

கருவியின் பெயர்கள்	படம்	பயன்கள்
மண்வெட்டி		அச்சு மண்ணை கலப்பதற்கும், அச்சு பெட்டியில் மண்ணை நிரப்புவதற்கு பயன்படுகிறது
சல்லடை		அச்சு மண்ணில் கலந்துள்ள தேவையற்ற பொருட்களை நீக்கி சுத்தம் செய்ய பயன்படுகிறது
திமிசு		வார்ப்பக பெட்டியில் மண்ணை அழுத்தி நிரப்புவதற்கு பயன்படுகிறது
கரணை		இது வார்ப்பின் மேற்பரப்பை மென்மையாக்கவும்,சேதமடைந்த பகுதியை சரிசெய்யவும் பயன்படுகிறது.
இருமுனை கரண்டி		அச்சின் பரப்புகளை சீராக்கவும் வட்டவடிவ முனைகளை சரிசெய்யவும் பயன்படுகிறது
தூக்கி		அச்சில் உள்ள உதிரி மண்ணை வெளியே எடுக்கவும் அச்சை சரி செய்ய பயன்படுகிறது
மட்டக்கோல்		திமிசு (Ramming) வேலை செய்த பிறகு அச்சுப்பெட்டியில் இருந்து அதிகப்படியான மண்ணை அகற்ற பயன்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 65 1/31/2023 12:08:28 PM

வார்ப்பு ஊற்றும் குழாய்		வார்ப்பில், ரன்னர் மற்றும் ரைசருக்குத் தேவையான துளையை ஏற்படுத்த பயன்படுகிறது.
காற்று அழுத்தி		தளர்வான உதிரி மண்ணை ஊதி வெளியேற்ற பயன்படுகிறது
ஸ்வேப்		அச்சிலிருந்து மாதிரி வடிவத்தை எடுப்பதற்கு முன்,மாதிரி வடிவத்தை சுற்றி சிறிதளவு தண்ணீர் செலுத்த பயன்படுகிறது
கேட் கட்டர்		அச்சிற்கு செல்லும் வழியை வெட்ட பயன்படுகிறது.
டிரா ஸ்பைக்		அச்சில் இருந்து மாதிரி வடிவத்தை வெளியே எடுப்பதற்கு பயன்படுகிறது.
வென்ட் ராடு	 	இது அச்சில் சிறு துவாரங்களை ஏற்படுத்தப் பயன்படுகிறது. வார்ப்பு செய்யும் போது இந்த துவாரங்கள் வழியே நீராவி மற்றும் வாயு வெளியேறுகிறது.
மர சுத்தி	 	இது டிரா ஸ்பைக்கை அச்சில் அடித்து பொருத்தப் பயன்படுகிறது.

5.3.2. அச்சுப் பெட்டிகள் (Moulding Boxes)

அச்சுப் பெட்டியை பயன்படுத்தி மண்ணில் அச்சு (Sand Moulding) தயாரிக்கப்படுகிறது. இது மரம் (அ) உலோகத்தால் செய்யப்பட்ட கட்டமைப்பு (Frame) ஆகும். இது மேலும் கீழும் திறந்துள்ள பெட்டி வடிவமானது. மாதிரி அச்சு (Pattern) இரண்டு பெட்டிகளில் செய்யப்பட்டால் மேல் பெட்டிக்கு கூப் (Cope) என்றும், கீழ் உள்ள பெட்டிக்கு டிராக் (Drag) என்றும் பெயர்.இரண்டு பெட்டிகளும் டுவல் பின் (Dowel Pin) மூலம் சரியாகப் பொருத்தப்படுகிறது. அதே போல் மாதிரி அச்சு மூன்று பெட்டிகளில் செய்யப்பட்டால் மையத்தில் உள்ள பெட்டிக்கு சீக் (Cheek) என்று பெயர்.



அச்சுப் பெட்டிகள் (Moulding Boxes)

5.3.3. அச்சுமண் (Moulding sand):

அச்சு மண், வார்ப்பகத் துறையில் முக்கியமான ஒன்றாகும். இது உருகிய உலோகத்தின் அதிக வெப்ப நிலையைத் தாங்கக் கூடியது. உருகிய

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 66 1/31/2023 12:08:29 PM

உலோகத்துடன் வினைபுரிவது இல்லை. உருகிய உலோகத்தை ஊற்றும் போது அச்சிலிருந்து (Mould) நீராவி மற்றும் வாயுக்களை வெளியே செல்ல அனுமதிக்கிறது. மேற்கண்ட இந்த பண்புகளுக்காக, அச்சு மண், வார்ப்பு (Casting) செய்ய பயன்படுத்தப்படுகிறது.

5.3.4. அச்சு மண்ணில் கலந்துள்ள மூலப்பொருட்கள் (Moulding Sand Ingredients):

அச்சு மண்ணில் கீழ்க்காணும் மூலப்பொருட்கள் கலந்துள்ளது.

1. மணல் (Sand)
2. பசைபொருள் (Binder)
3. சேர்க்கைகள் (Additives)

மண் (Sand):

இதில் சிலிக்கா (Silica), களிமண் (Clay) மற்றும் ஈரப்பதம் அடங்கியுள்ளது.இதில் 80% முதல் 90% வரை மண் சேர்க்கப்படுகிறது. 5% முதல் 20% வரை களிமண் அடங்கி உள்ளது இது வலிமையான பிடிப்புத் தன்மை தருகிறது, 2% முதல் 8% வரை மண்ணில் நீர் சேர்ப்பதின் மூலம் அது ஈரப்பதத்தை தருகிறது.

பசைபொருள் (Binder):

வலிமை மற்றும் எளிதில் உருமாறும் தன்மை பெற அச்சு மண்ணுடன் பசைபொருள் சேர்க்கப்படுகிறது. இதில் களிமண் வகை பசைபொருள் வழக்கமாக பயன்படுத்தப்படுகிறது.

சேர்க்கைகள் (Additives):

உறுதி (Strength), ஊடுருவக் கூடிய தன்மை (Permeability) வெப்பம் தாங்கும் தன்மை போன்ற பண்புகளை மேம்படுத்த அச்சு மண்ணில் சேர்க்கைகள் சேர்க்கப்படுறது. அவையாவன,

- குறைக்கும்பொருள் (Reducing Agents) நிலக்கரி தூள், எண்ணெய் எரிபொருள், தார்
- நார்சத்துள்ள பொருள் (Fiberous Material) வைக்கோல், மாட்டுசாணம்,கல்நார் மற்றும் மரத்தூள்,
- சிறப்பு சேர்க்கைகள் (Special Additives) டெக்ஸ்ட்ரின் (Dextrin) என்கின்ற செயற்கை பசை , வெல்லப்பாகு (molasses).

5.3.5. அச்சு மண்ணின் வகைகள்: (Classification of Moulding Sand)

அச்சு மண்ணின் வகைகள் கீழ்கண்ட வாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. இயற்கை மண் (Natural Sand)
2. செயற்கை சேர்ம மண் (Synthetic Sand)
3. சிறப்பு மண் (Special Sand)

இயற்கை மண் (Natural Sand)

ஆற்றுப்படுகையில் கிடைக்கும் மணல் வகையைக் குறிக்கும். இதில் 80% முதல் 90% வரை சிலிக்காவும் ,5% முதல் 10% வரை அலுமினினா அல்லது , களிமண்ணும், குறைந்த அளவில் சுண்ணாம்பு மக்னீசியம் கலந்து இருக்கும். இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகங்களை வார்ப்பு செய்யப் பயன்படுகிறது.



இயற்கை மண் (Natural Sand)

செயற்கை சேர்ம மண் (Synthetic Sand)

தேவையான பண்புகளை பெற இயற்கை மண்ணுடன் சில பொருட்களை சேர்த்து செயற்கை சேர்ம மணல் தயாரிக்கப்படுகிறது. பெண்ட்டோனைட், நீர், இரும்புஆக்சைடு, கால்சியம், மெக்னீசியம் போன்ற பொருட்கள் இயற்கை மண்ணுடன் கலந்து இருக்கும். இது இயந்திர அச்சு (Machine Moulding) மற்றும் அதிக அழுத்த அச்சு (High pressure Moulding) செய்யப்பயன்படுகிறது.



செயற்கை சேர்ம மண் (Synthetic Sand)

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 67 1/31/2023 12:08:30 PM

5.3.6. அச்சு மண்ணின் பண்புகள் (Properties of Moulding Sand):

ஒரு சிறந்த அச்சுமண் (Moulding Sand) பின் வரும் பண்புகளை பெற்றிருக்க வேண்டும்.

1. காற்று புகுந்துசெல்லும் தன்மை (porosity)
2. பிளாஸ்டிக் தன்மை (Plasticity)
3. ஒட்டிக்கொள்ளும் தன்மை (Adhesiveness)
4. ஒன்றாக இணையும் தன்மை (Cohesivness)
5. வெப்பம் தாங்கும் தன்மை (Refractoriness)
6. தூளாகும் தன்மை (Collapsibility)

5.3.7. பிரிமணல் (Parting Sand)

இது பிடிப்பு மற்றும் ஈரப்பதம் இல்லாத மணல் ஆகும். இது அச்சு மண் மாதிரி வடிவத்துடன் ஒட்டுவதை தவிர்க்கப் பயன்படுகிறது. கூப் (cope) மற்றும் டிராக் (Drag) பெட்டிகளின் மேற்பரப்பை பிரிக்கும் பொருளாக செயல்படுகிறது. இது பெரும்பாலும் சிலிக்கா இல்லாத மணல் மற்றும் சுத்தமான களிமண் ஆகும்.

5.3.8. வாயில் அமைப்பு (Gating System):

வாயில் அமைப்பு (Gating System) என்பது போரிங் கப் (Pouring cup), ஸ்புரு (Spure), ரன்னர் (Runner), ரைசர் (Riser), கேட் (gate), ஆகியவை அடங்கியதாகும்.

போரிங் கப் (Pouring Cup):

இது ஸ்புரு (Sprue) துவாரத்தின் மேல் பாகத்தில்உள்ள புனல் வடிவம் பகுதியை குறிக்கும். இதன் வழியாக உலோகம் எளிதாக ஊற்றப்படுகிறது.

ஸ்புரு (Spure):

இது போரிங் கப்பையும் (Pouring cup) ரன்னரையும் (Runner) இணைக்கும் துளை ஆகும். உருகிய உலோகம் ஸ்புருவில் (Spure) இருந்து ரன்னருக்கு (Runner) செல்லும் பாதையாகும்.

ரன்னர் (Runner):

இது உருகிய உலோகத்தை ஸ்புரு (Spure) பகுதியிலிருந்து பெற்று வார்ப்புக் குழியுடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு வாயில்களுக்கும் வழங்குகிறது.

கேட் (Gate):

இது ரன்னர் மற்றும் அச்சை (Mould) இணைக்கிறது. உருக்கிய உலோகமானது கேட் வழியே அச்சிற்கு (Mould) செல்கிறது.



வாயில் அமைப்பு (Gating System)

ரைசர் (Riser)

இது கூப் (Cope) பகுதியின் மேல் உள்ள துளை ஆகும். வார்ப்புக் குழியில் உலோகம் நிரம்பிய பின் அதிகப்படியான உருகிய உலோகம் இப்பாதை வழியாக மேல் நோக்கி வருகிறது.

5.3.9. அச்சு வகைகள் (Types of Moulding):

1. பசுமை மண் அச்சு (Green Sand Moulding)
2. உலர் மண் அச்சு (Dry Sand Moulding)
3. பென்ச் அச்சு (Bench Moulding)
4. தரை அச்சு (Floor Moulding)
5. இயந்திர அச்சு (Machine Moulding)

பசுமை மண் அச்சு (Green Sand Moulding):

பசுமை மண் அச்சு என்பது பச்சை நிறத்தை குறிக்காது. ஆனால், உருகிய உலோகத்தை ஊற்றும் பொழுது அந்த மண் ஈரப்பதத்துடன் இருக்கும். பிளவு மாதிரி வடிவத்தை பயன்படுத்தி பசுமை அச்சு மண் தயாரிக்கும் முறையை வரிசையாக காண்போம்.



பசுமை மண் அச்சு
(Green Sand Moulding)

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 68 1/31/2023 12:08:30 PM

அச்சு செய்தவுடன் உருக்கிய உலோகத்தை ஊற்றி வார்ப்பு தயாரிக்கலாம். பிளவு மாதிரி வடிவத்தை (Split pattern) பயன்படுத்தி பசுமை மண் அச்சு தயாரிக்கும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. மாதிரி வடிவத்தின் (Pattern) ஒரு பகுதியை வார்ப்பு பலகை மீது வைக்க வேண்டும்.
2. டிராக் பாக்சை (Drag box)– வார்ப்பு பலகையின் மீது தலை கீழாக வைத்து பிரி மண்ணை (Parting sand) தூவ வேண்டும்.
3. வார்ப்பு பெட்டியில் முகப்பு மணலை 20 மிமீ அளவிற்கு நிரப்பிய பின்பு அச்சு மண்ணை நிரப்ப வேண்டும்.
4. திமிசு கட்டையால் (Rammer) அச்சு மண்ணை சீராக இறுக்க வேண்டும்.
5. மட்டக் கோல் (Strike off bar) மூலம் அதிகப்படியான மண்ணை நீக்கி மட்டம் செய்ய வேண்டும்.
6. சிறுசிறு துவாரங்களை (Vent Hole) ஏற்படுத்த வேண்டும். பிரி மண்ணை தூவி டிராக் பாக்சை (Drag Box) தலை கீழாக வைக்க வேண்டும்.
7. மாதிரி உருவத்தின் மறுபாதி மற்றும் கூப் பாக்சை (Cope Box) சரியாக பொருத்துதல் வேண்டும். பின்பு பிரி மண்ணை தூவ வேண்டும்.
8. கூப் பாக்சில் (Cope Box) ரன்னர் பின் மற்றும் ரைசர் பின்னை சரியான இடத்தில் வைக்க வேண்டும். பின்னர் நுண் மணல் (Facing Sand) மற்றும் அச்சு மணலை நிரப்ப வேண்டும்.
9. மண்ணை சீராக அழுத்த (Ramming) வேண்டும். வெண்ட் ராடு (Vent Rod) மூலம் துவாரங்கள் ஏற்படுத்த வேண்டும்.
10. ரன்னர் பின் (Runner Pin), ரைசர் பின் (Riser Pin) இரண்டையும் எடுத்து விட்டு புனல் வடிவத்தை (pouring cup) உருவாக்க வேண்டும்.
11. மாதிரி வடிவத்தை வெளியே எடுக்கும் வகையில் கூப் (Cope) மற்றும் டிராக் (Drag) பெட்டியை பிரித்து வைக்க வேண்டும். மாதிரி வடிவத்தைச் சுற்றி தண்ணீர் தெளிக்க வேண்டும்.
12. டிராக் ஸ்பைக்கை (Drag Pike) மாதிரி வடிவத்தில் (Pattern) அடித்து எல்லா பக்கங்களிலும் அசைத்து மெதுவாக மாதிரி வடிவத்தை (Pattern) வெளியே எடுக்க வேண்டும்.
13. டிராக்கில் (Drag) ரன்னர் (Runner) மற்றும் கேட் வாயில் (Gate Way) அமைக்க வேண்டும்
14. கெட்டி உள்ளகம் (Core) தேவைப்பட்டால் அச்சில் (Mould) பொருத்த வேண்டும்.
15. கூப் (Cope) மற்றும் பெட்டிகளை சரியாகப் பொருத்த வேண்டும். கூப் (Cope) மீது எடை (Weight) வைக்க வேண்டும். உருக்கிய உலோகத்தை இந்த பசுமை மண் அச்சில் (Green Sand Mould) ஊற்றி வார்ப்பு தயாரிக்கலாம்.

5.4. உள்ளகம் (CORE)

இது உள்ளிடற்ற வார்ப்பு செய்யப் பயன்படுகிறது. எவ்வகை உள்ளிடற்ற வடிவம் வேண்டுமானாலும் இந்த உள்ளகத்தை பயன்படுத்தி தயார் செய்யாலாம்.

உள்ளகம் தயாரித்தல் (Core Making) இந்த உள்ளகத்தின் வடிவமானது, அச்சில் உள்ள உள்ளீடற்ற வடிவத்தைப் போல் இருப்பது அவசியம். உள்ளகம் தயாரிக்க உள்ளக மண் தேவைப்படுகிறது. இந்த உள்ளக மண்ணில், உலர் சிலிக்கா மண் (Dry Silica Sand) 94%, தண்ணீர் 2.3% உள்ளக எண்ணெய் (Core Oil) 1.4% மற்றும் ஸ்டார்ச் (Starch)1.4% ஆகியவை கலந்திருக்கும்.

செயல்பாடுகள்

- அருகில் உள்ள வார்ப்பகம் சென்று பார்வையிட்டு அங்கு வார்ப்பு எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை எழுதி விளக்குக.
- களிமண் மற்றும் பிளாஸ்டிக் பெட்டியை பயன்படுத்தி வார்ப்பு மாதிரி (அல்லது) வார்ப்பு வடிவம் செய்க.

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 69 1/31/2023 12:08:30 PM

GLOSSARY

Pattern	மாதிரிவடிவம்
Mould	அச்சு
Casting	வார்ப்பு
Riddle	கம்பிவலை சல்லடை
Squeezing	அழுத்துதல்
Jolt	குலுக்குதல்
Slinger	வீசுதல்
Porosity	புரைமை
Plasticity	நெகிழித்தன்மை
Cohesiveness	ஒட்டுத்தன்மை
Refractoriness	வெப்பந்தாங்கும் தன்மை

வினாக்கள்

பகுதி அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1 மதிப்பெண்)

1. தலைமை மாதிரி வடிவம் செய்யப்படும் பொருள்
   (அ) மரம்
   (ஆ) உலோகம்
   (இ) மெழுகு
   (ஈ) பிளாஸ்டிக்

2. குறைந்த அளவு மட்டுமே மாதிரி வடிவம் தயாரிக்க தேவையான பொருள்
   (அ) மரம்
   (ஆ) தெர்மோ செட்டிங் பிளாஸ்டிக்
   (இ) மெழுகு
   (ஈ) வார்ப்பு

3. வார்ப்பட சாலையில், தேவையற்ற பெருட்களை நீக்கி மண்ணை சுத்தப்படுத்தும் கருவி
   (அ) மண்வெட்டி
   (ஆ) காற்றழுத்தி
   (இ) இரு முனை கரண்டி
   (ஈ) சல்லடை

4. அச்சு மண்ணில் (Moulding Sand) கலந்துள்ள மூலப்பொருள்
   (அ) மெழுகு
   (ஆ) கண்ணாடி
   (இ) பசைபொருள்
   (ஈ) ரப்பர்

5. உள்ளிடற்ற வார்ப்பு செய்யப் பயன்படும் பொருள் எது?
   (அ) டுவல் பின்
   (ஆ) உள்ளகம்
   (இ) மாதிரி அச்சு
   (ஈ) வார்ப்புப் பெட்டி

பகுதி ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். (3 மதிப்பெண்கள்)

6. மாதிரி வடிவம் தயாரிக்க பயன்படும் பொருட்கள் யாவை?
7. அச்சு பெட்டி என்றால் என்ன?

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 70 1/31/2023 12:08:31 PM

8. மாதிரி வடிவம் செய்ய பயன்படும் பொருட்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கலாம்?
9. திமிசின் (Rammer) பயன் என்ன?
10. அச்சு மண்ணின் வகைகள் யாவை?

பகுதி இ

ஒரு பக்க அளவில் விடை தருக

(5 மதிப்பெண்கள்)

11. அச்சுக் கருவிகள் (Moulding Tools) வரிசைப்படுத்துக?.
12. அச்சு மண்ணின் பண்புகளை விளக்குக?.
13. அச்சுகளின் (Moulding) வகைகளை வரிசைப்படுத்துக?
14. அச்சு மண் தயாரிக்கப் பயன்படும் மூல்ப்பொருள்கள் யாவை? ஏதேனும் ஒன்றினை விளக்குக.
15. வாயில் (Gatting system) அமைப்பில் உள்ள பாகங்களை விளக்குக.

பகுதி ஈ

இரு பக்க அளவில் விடை தருக.

(10 மதிப்பெண்கள்)

16. வார்ப்பு செய்யப் பயன்படும் கருவிகளை வரிசைப்படுத்துக. ஏதேனும் இரண்டினை படம் வரைந்து பயனைத் தருக.
17. அச்சு பெட்டியின் பயனைக் கூறி, படத்துடன் விளக்குக.
18. பசுமை மணல் அச்சு (green sand moulding) செய்யும் முறையை படிப்படியாக படத்துடன் விளக்குக.
19. மாதிரி வடிவம் செய்யப் பயன்படும் பொருட்களை வகைப் படுத்துக. ஏதேனும் இரண்டினை விளக்குக.

XI_TM_BME_Tamil_Chapter05_2022.indd 71 1/31/2023 12:08:31 PM

பாடம்

6

பொறியியல் பொருட்கள் மற்றும் வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தல்

கற்றலின் நோக்கம்

- பல்வேறு பொறியியல் பொருட்கள் அவற்றின் குணங்கள் மற்றும் வகைகள் ஆகியவற்றை பற்றி அறிந்து கொள்ளுதல்.
- உலோகங்கள், உலோகம் அல்லாத பொருட்கள், இரும்பு கலந்த உலோகங்கள் மற்றும் இரும்பு கலவாத உலோகங்கள், எஃகு, வார்ப்பிரும்பு ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- பொறியியல் பொருட்களின் பயன்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- உலோகங்களை வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தல் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தலின் நோக்கம் மற்றும் அவற்றின் முறைகள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்ய உதவும் உலைகள் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

6.1. அறிமுகம்

6.2. பொறியியல் பொருட்கள்: (Engineering Materials)

6.3. உலோகங்களின் பண்புகள்

6.4. உலோகங்கள்

6.5. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தல்

6.6. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்வதன் நோக்கம்

6.7. கீழ் மற்றும் மேல் முக்கிய வெப்பநிலை

6.8. நார்மலைசிங்

6.9. விரைவாகக் குளிரச் செய்தல்

6.1. அறிமுகம்

பொதுவாக, பொருட்கள் என்பது எவ்வகையைச் சார்ந்ததாகவும் இருக்கலாம். அவை, தூய்மையானதாகவோ அல்லது தூய்மையற்றதாகவோ, கலவை கொண்ட பொருளாகவோ அல்லது கலவையற்றதாகவோ, உயிருள்ள அல்லது உயிரற்ற பொருளாகவோ இருக்கலாம். இது திட, திரவ மற்றும் வாயு நிலைகளில் உள்ளது. இயற்பியல், வேதியியல் மற்றும் சில பண்புகளை அடிப்படையாக கொண்டு பொருட்கள் பல பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.தொழில்துறையில் உற்பத்திக்காகவும், தயாரிப்புப் பணிக்காகவும் பொருட்கள் உட்படுத்தப்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 72 1/31/2023 12:18:07 PM

இது பொறியியல் துறையில் பொருட்களை தயாரிக்கும் மூலப்பொருளாக உள்ளது. சிந்தட்டிக் வகை பொருட்கள், மருத்துவத்துறை, ஜவுளித்துறை மற்றும் வீட்டு உபயோகம் மற்றும் பிற துறைகளில் பயன்படுகிறது,

மணல், களிமண், கல், சுண்ணாம்பு ஆகியவை இயற்கையில் கிடைக்கும் பொருட்கள் ஆகும். செயற்கை பொருட்கள் என்பது இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருட்களில் இருந்து தயார் செய்யப்படுகிறது. வெவ்வேறு வகையான பொருட்கள் அவற்றின் பண்புகளுக்கு ஏற்ப வெவ்வேறு வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. பொருளின் இத்தகைய பண்புகளை மேம்படுத்த அவற்றில் சில குணமாற்றங்களை செய்ய வேண்டும். வெபப்படுத்தி குணமாற்றம் என்பது பொறியியல் துறையில் பொருட்களின் பண்புகளை மேம்படுத்த பயன்படும் ஒரு முக்கிய முறையாகும்.

6.2 பொறியியல் பொருட்கள் (ENGINEERING MATERIALS)

மில்லிங் வெட்டுளி, ஹாக்சா பிளேடு போன்ற பொறியியல் உபகரணங்கள் தயாரிக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற பொறியியல் பண்புகளைகொண்ட அதிக கரி கொண்ட எஃகு மற்றும் அதிவேக எஃகு ஆகிய உலோகங்களை பயன்படுத்தி தயாரிக்க வேண்டும். அதேபோல், வெட்டுளிகள் அதிக வலிமை, கெட்டிப்புத் தன்மை, கடினத்தன்மை, அதிக அரிமான எதிர்ப்பு போன்ற பண்புகளை பெற்றிருக்க வேண்டும்.டங்ஸ்டன் கார்பைடு, வெனடியம் கார்பைடு, மாலிப்டினம் எஃகு போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி வெட்டுளிகள் தயாரிக்கப்படுகிறது. முன்னேற்றம் அடைந்த புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, அதிக வலிமை, அரிமான எதிர்ப்பு மற்றும் வெப்ப எதிர்ப்பு ஆகிய பண்புகள் உலோகங்களில் அதிகரிக்க செய்யப்படுகிறது.

6.3. உலோகங்களின் பண்புகள்

பொறியியல் பொருட்களை பயன்படுத்தி, ஒரு பாகத்தை தயாரிப்பதனால், அதைப் பற்றிய பொறியியல் பண்புகள் முழுவதும் அறிந்திருக்க வேண்டும். பல்வேறு பொருட்கள், பல்வேறு வகையான பண்புகளை பெற்றிருந்தாலும் அவற்றில் ஒரு சில முக்கிய பண்புகள், நம் பொறியியல் துறைக்கு பயன்படுகிறது.

6.3.1. இயந்திரவியல் பண்புகள் (Mechanical properties)

பொறியாளர்கள் கண்டிப்பாக இயந்திரவியல் பண்புகளை முழுமையாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.ஏனென்றால், இயந்திரங்கள், இயந்திர பாகங்கள் மற்றும் அதன் அமைப்பு ஆகியவற்றை வடிவமைக்கும் பொழுது இயந்திரவியல் பண்புகள் முக்கிய பங்கு வகிக்கிறது.

பண்புகளின் வகைகள்	விளக்கம்	உதாரணம்
இயற்பியல் பண்புகள்	பொருளின் கலவையில் மாற்றம் இல்லாமல் இயற்பியல் பண்புகளை அளவிடலாம் அல்லது கவனிக்கலாம்.	அடர்த்தி, நீளும் தன்மை, புரைமை, வெப்பம் கடத்தும் தன்மை, உள்ளார்ந்த வெப்பம், காந்தப்பண்பு.
வேதியியல் பண்புகள்	பொருள் முற்றிலும் வேறுபட்ட பொருளாக மாறும் போது மட்டும் வேதியியல் பண்புகளை அளவிடலாம் அல்லது கவனிக்கலாம்.	எரியக்கூடிய தன்மை, எரியூட்டும் வெப்பம், இரசாயன நிலைத்தன்மை, ஆக்சிஜனேற்றம், அரிமான எதிர்ப்பு.
மின்னியல் பண்புகள்	மின்னியல் பண்புகள் என்பது மின்னோட்டத்தை கடத்தும் திறன் கொண்டது.	எதிர்ப்பாற்றல், கடத்தும் திறன் எதிர்ப்பு வெப்பநிலைக் குணகம், வெப்ப மின்னாற்றல்.
இயந்திரவியல் பண்புகள்	ஒரு பொருளின் மீது விசையோ, அல்லது பளுவோ தரும்பொழுது, அதில் ஏற்படும் உருமாற்றம் இயந்திரவியல் பண்பு ஆகும்.	உறுதித்தன்மை, கடினத்தன்மை, சிதறும் தன்மை, தகடாக நீளும் தன்மை, விறைப்புத் தன்மை, கம்பியாக நீளும் தன்மை, நீளும் தன்மை.
வெப்பவியல் பண்புகள்	வெப்பவியல் பண்புகள் என்பது அதன் வெப்ப கடத்துத் திறனுடன் தொடர்புடைய பொருளின் பண்புகளாகும்.	உள் வெப்பம், வெப்பத் திறன், வெப்ப விரிவு, வெப்ப ஏற்புத் திறன், உருகு நிலை.

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 73 1/31/2023 12:18:08 PM



இயந்திரவியல் பண்புகள்	விளக்கம்	உதாரணம்
உறுதித்தன்மை	உலோகப் பொருள் திடீர் வெளிப்புற விசையை தாங்குமானால் அது உறுதித்தன்மையை பெற்றுள்ளது என்று பொருள். அதாவது அப்பொருள் உருமாற்றம் செய்யப்படும் பொழுது உடையாமலிருக்க ஒரு குறிப்பிட்ட ஆற்றலைப் பெற்றிருந்தால் அதற்கு உறுதித் தன்மை	தேனிரும்பு, மைல்டு ஸ்டீல்
கடினத்தன்மை	கடினத் தன்மை என்பது உலோகப் பொருளின் அடிப்படை பண்பாகும்.இது அதன் வலிமையைக் குறிக்கும்.உலோகத்தை கீறல் ஏற்படுத்தவோ, தேய்க்கவோ, அறுக்கவோ, வெட்டவோ முடியாத பண்பிற்கு கடினத் தன்மை	அதிக கரி கொண்ட எஃகு மற்றும் அதிவேக எஃகு, வைரம் மிகவும் அதிக கடினத்தன்மை கொண்டது.
சிதறும் தன்மை	ஒரு பொருளின் மீது விசையோ, அல்லது பளுவோ தரும்பொழுது, அப்பொருள் எளிதில் உடையுமானால் அதற்கு சிதறும் தன்மை	வார்ப்பிரும்பு
தகடாக நீளும் தன்மை	உலோக பொருளின் மீது அழுத்தம் தரும் பொழுது அது உடையாமல் தகடாக நீளுமானால், அந்த உலோகம் "தகடாக நீளும் தன்மை" பெற்றுள்ளது என்று பொருள்.சுத்தியல் மூலமோ, ரோலிங் இயந்திரம் மூலமோ உலோகத்தை தகடாக மாற்றலாம்.	செம்பு, அலுமினியம், வெள்ளி
கம்பியாக நீளும் தன்மை	கம்பியாக நீளும் தன்மை என்பது உலோகத்தின்பண்புகளில் ஒன்று, உலோகத்தை கம்பியாக மாற்றும் பொழுது அது உடையாமல் நீளுமானால், அந்த உலோகம் "கம்பியாக நீளும் தன்மை" பெற்றுள்ளது என்று பொருள். இச்சிறப்பு பண்பினைப் பயன்படுத்தி உலோகங்களை கம்பியாக மாற்றலாம்	செம்பு, அலுமினியம், வெள்ளி,தங்கம்.
மீள் தன்மை	உலோகத்தின் மீது செலுத்திய விசை திரும்பப் பெறும் பொழுது, அந்த உலோகம் மீண்டும் தன்னுடைய பழைய நிலையை அடையும்.இதற்கு நீளும் தன்மை. இது சுருள் வில் (Spring) தயாரிக்க பயன்படுகிறது.	குறைந்த கரி கொண்ட எஃகு

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 74 1/31/2023 12:18:08 PM



படம் 6.1 உறுதித்தன்மை, கடினத்தன்மை, சிதறும் தன்மை

6.4. உலோகங்கள்

பொறியியல் துறையில் உலோகங்களே அதிக பயன்பாட்டில் உள்ளது.இவை மிகவும் உறுதியானது.குறிப்பிட்ட வடிவத்திற்கு எளிதில் மாற்ற முடிகிறது என்பதால், வெட்டுளிகள் செய்யப் பயன்படுத்துகிறார்கள். பாலங்கள், கட்டிடங்கள் மற்றும் கப்பல்கள் கட்டுவதற்கு இரும்பு மற்றும் எஃகு பயன்படுத்தப்படுகிறது.பெரும்பாலான உலோகங்கள் கடினமானது, மிளிரக்கூடியது, அதிக எடைக் கொண்டது, அதிக வெப்பநிலையில், வெப்பப்படுத்தினால் உருகக் கூடியது. வெப்பத்தையும், மின்சாரத்தையும் கடத்தக் கூடியது.கெட்டியான உலோகங்களை தகடாகவும், கம்பியாகவும் மாற்றலாம்.உலோகங்கள் அதன் அறை வெப்பநிலையில் (Room Temperature) திடநிலையில் உள்ளது.எல்லா உலோகங்களும் மேற்கண்ட எல்லா பண்புகளையும் பெற்றிருக்காது. பாதரசம், அதன் அறைவெப்பநிலையில் (Room Temperature) நீர்ம நிலையில் உள்ளது.

உலோகங்கள் இரண்டு வகைப்படும் அவையாவன, இரும்பு கலந்த உலோகம் (Ferrous), இரும்பு கலவாத உலோகம் (Non – Ferrous).

6.4.1. இரும்பு கலந்த உலோகம் (Ferrous)

இந்த உலோகத்தில் அதிகப்படியாக இரும்பும், குறைந்த அளவு மற்ற பொருட்களும் கலந்திருக்கும். இந்த உலோகம் மற்ற உலோகங்களுடன் சேரும் பொழுது பல்வேறு பண்புகளை பெறுகிறது.

இரும்பு கலந்த உலோகங்களின் வகைகள்

1. சுத்தமான இரும்பு (Pure Iron)
2. எஃகு (Steel)
3. வார்ப்பிரும்பு (Cast Iron)

சுத்தமான இரும்பு (Pure Iron)

இரும்பு என்பது ஒரு வேதிப்பொருள்.இதன் அடையாள குறியீடு Fe. இதன் அணு எண் 26 ஆகும். இது குறைந்த அளவு கரி கொண்ட (0.1 %) இரும்பு கலவை ஆகும். பொறியியல் துறையில் இது சுத்தமான இரும்பு என்று அழைக்கப்படுகிறது. இது பொதுவாக, மென்மையாது.

எஃகு இரும்பு : எஃகு என்பது இரும்பு, கார்பன் மற்றும் இதரபொருட்கள் கலந்த கலவை ஆகும். இதில் 0.1% முதல் 1.5% வரை கார்பன் கலந்துள்ளது. அதிக நீள்விசை தாங்கும் குணம் மற்றும் குறைந்த விலை கொண்டதாக இருப்பதால், கட்டிடங்கள், உள்கட்டமைப்பு, வெட்டுளிகள், கப்பல்கள்,

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 75 1/31/2023 12:18:08 PM



தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் ஆயுதங்கள் செய்ய முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது. எஃகினை, அதில் கலந்துள்ள வேதிப்பொருட்களின் அடிப்படையில் அதை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. கார்பன் எஃகு (Carbon Steel)

   அ. குறைந்த கரி கொண்ட எஃகு (Low carbon steel)

   ஆ. நடுத்தர கரி கொண்ட எஃகு (Medium carbon Steel)

   இ. அதிக கரி கொண்ட எஃகு (High Carbon Steel)

2. கலவை எஃகு (Alloy Steel)

   அ. துருப்பிடிக்காத எஃகு (Stainless Steel)

   ஆ. வெட்டுளி எஃகு (Tool Steel)

கார்பன் எஃகு : (Carbon Steel) கார்பன் எஃகு அல்லது எஃகு என்பது ஒரு கலவை உலோகம். இது இரும்பும், கார்பனும் சேர்ந்த கலவை ஆகும்.

மேலும் சில உலோகப் பொருட்கள் குறைந்த அளவு இதில் கலந்திருக்கும்.இதில் கார்பன் அளவு அதிகரிக்க, உலோகத்தின் கடினத் தன்மை மற்றும் வலிமை அதிகரிக்கிறது.ஆனால் கம்பியாக நீளும் தன்மையும், பற்றிணைப்பு (Welding) தன்மையும் குறைகிறது. கார்பனின் அளவைப் பொறுத்து கார்பன் எஃகு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

அ. குறைந்த கரி கொண்ட எஃகு (Low carbon steel) (அல்லது) மைல்டு ஸ்டீல் (Mild Steel). (கார்பன் அளவு 0.3% வரை கலந்திருக்கும்)

ஆ. நடுத்தர கரி கொண்ட எஃகு(Medium carbon Steel) (கார்பன் அளவு 0.3% முதல் 0.6% வரை)

இ. அதிக கரி கொண்ட எஃகு (High Carbon Steel) (கார்பன் அளவு 0.6% முதல் 1.7%வரை)

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 76 1/31/2023 12:18:08 PM

கலவை எஃகு (Alloy Steel)

3. ரிங் ஸ்பேனர்
4. சாக்கெட் ஸ்பேனர்
5. பாக்ஸ் ஸ்பேனர்

ஸ்குரு டிரைவர்

ஸ்குரு டிரைவர் என்பது பொருட்களை இணைப்பதற்கு பயன்படும் மரையாணியை இறுக்கவதற்கோ அல்லது தளர்ச்சி அடைய செய்வதற்கோ பயன்படும் கைக்கருவி ஆகும். ஸ்குரூ டிரைவரின் முனையின் வடிவத்தைப் பொறுத்து அது வகைப்படுத்தப்படுகிறது.

ஸ்குரூ டிரைவரின் பொதுவான வகைகள் சில கீழ்கண்ட படங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

S. No.	Types	Pictures
1.	ஒரு முனை ஸ்பேனர் Open Ended Spanner	
2.	இரு முனை ஸ்பேனர் Double Ended Spanner	
3.	ரிங் ஸ்பேனர் Ring Spanner	
4.	சாக்கெட் ஸ்பேனர் Socket Spanner	
5.	பாக்ஸ் ஸ்பேனர் فط غ ق ش ة غ ح	

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 100 1/31/2023 12:19:27 PM

S.No.	Type	Picture
1.	சிலாட் – Slot	
2.	பிலிப்ஸ் – Philips	
3.	ட்ராக்ஸ் – Trox	
4.	ஆலென் – Allen	

பிளையர்:

பிளையர் என்பது சிறு பொருட்களை இறுக்கமாக பிடிப்பதற்கு பயன்படும் கைக்கருவி ஆகும். மேலும் சிறு ஒயர்களை வெட்டித் துண்டாக்குவதற்கும் இது பயன்படுகிறது.

.S.No	Types	Pictures
.1	ஒருங்கிணைந்த இடுக்கி Combination Plier	
.2	கூர்முனை இடுக்கி Nose Plier	

7.4. அளக்கும் கருவிகள் (Measuring Tools)

அளக்கும் கருவிகள் என்பது பணிப்பொருளின் வடிவம் மற்றும் அளவிற்கு ஏற்ப அளக்கப் பயன்படும் ஒரு உபகரணம் ஆகும், அதில், நமக்கு தேவையான சில அடிப்படை அளக்கும் கருவிகளை பற்றி விவாதிப்போம்.

7.4.1. அளவுகோல்கள் (Scales)

அளவுகோல்கள் என்பது, நீட்டல் அளவிடும் கருவி. இது, பொருட்களின் நீள, அகல, உயர அளவுகளை அளக்கவும் மற்றும் நேர்க்கோடுகளை வரையவும் அளவுகோல் பயன்படுகிறது. இந்த அளவுக்கோல், ஸ்பிரிங் ஸ்டீல், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஆகியவற்றால் செய்யப்பட்டது. எனவே, இதை "ஸ்டீல்ரூல்" (Steel Rule) என்கிறோம். இவ்வகை அளவுகோல், பொறியியல் துறையில் (Engineering) பயன்படுத்தப்படுகிறது.

அளவுகோலின் வகைகள்

1. வரையறுக்கப்பட்ட அளவுகோல் (Standard Scale)
2. வளையும் தன்மை கொண்ட அளவுகோல் (Flexible Scale)
3. குறுகலான அளவுகோல் (Narrow Scale)
4. கொக்கி கொண்ட அளவுகோல் (Hook Scale)
5. மடக்கி வைக்கப்படும் அளவுகோல் (Folding scale)
6. அளவை நாடா (Tape Scale)

வரையறுக்கப்பட்ட அளவுகோல்:

வரையறுக்கப்பட்ட அளவுகோல் (Standard Scale) மெட்ரிக் முறையில் அதிகபட்ச நீளமாக 150 மி.மீ. மற்றும் 300 மி.மீ. அளவுகளில் கிடைக்கிறது. மேலும் பிரிட்டிஷ் முறையில் அதிகபட்ச நீளமாக 6 அங்குலம் மற்றும் 12 அங்குலம் அளவில் கிடைக்கிறது. இவ்வகை அளவுகோல், எல்லா நாட்டினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



வரையறுக்கப்பட்ட அளவுகோல்

வளையும் தன்மை கொண்ட அளவுகோல்

இது மெல்லிய தகடால் ஆன ஸ்பிரிங் ஸ்டீல் என்ற உலோகத்தினால் செய்யப்பட்டதால், வளையும்

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 101 1/31/2023 12:19:27 PM

தன்மை கொண்டுள்ளது. இது, ஒழுங்கற்ற மற்றும் உருளையின் சுற்றளவை அளக்க உதவுகிறது.



வளையும் தன்மை கொண்ட அளவுகோல்

குறுகலான அளவுகோல்

இந்த அளவுகோலின் அகலம் குறுகலாக உள்ளது. இதன் அகலம் 1/4 அங்குலமாகும். இது குறுகிய மற்றும் நீண்ட துளையின் ஆழத்தை அளக்க பயன்படுகிறது.



குறுகலான அளவுகோல்

அளவைநாடா (Tape Scale)

இவ்வகை அளவு கோல் மெல்லிய எஃகு தகட்டினால் அல்லது பிளாஸ்டிக் துணியால் செய்யப்பட்டு, ஒரு பெட்டிக்குள் அடைக்கப்பட்டிருக்கும். இதை தேவையான நீளத்திற்கு வெளியே நீட்டிக்கொள்ளலாம். இவ்வகை அளவைநாடா விளையாட்டு மைதானம், வீட்டு மனைப் பிரிவுகள் போன்ற இடங்களில் அளக்கப் பயன்படுத்தப்படுகிறது.

அளவுகோல் பராமரிப்பு:

1. அளவுகோலை ஆப்பு போலவோ, திருப்புளி போலவோ பயன்படுத்த கூடாது.
2. அதிகமான எடையுள்ள பொருட்களை இதன் மீது வைக்ககூடாது.
3. கரடுமுரடான பரப்புகளின் மீது அளவுகோலை பயன்படுத்தகூடாது.

காலிபெர்கள் (Calipers)

காலிபெர்கள் பார்ப்பதற்கு கவராயம் போல் இருக்கும். இதன் கால்கள் உட்புறம் அல்லது வெளிப்புறம் வளைந்த கூர்மையான முனைகளைக் கொண்டது. உருளை வடிவப் பொருட்களின் வெளி அளவையும் நீண்ட, சதுர, செவ்வகப் பொருட்களின் உள் மற்றும் வெளி அளவையும் அளக்க காலிப்பர்கள் பயன்படுகிறது. இதில் அளவுகளை நேரடியாக அளக்க முடியாது. ஆனால் அளவு கோலின் உதவி கொண்டு அளக்கலாம்.

காலிப்பெரின் வகைகள் :

1. வெளியளவு காலிப்பெர்
2. உள்ளளவு காலிப்பெர்
3. ஜென்னி காலிப்பெர்

வெளியளவு காலிப்பெர் (Outside Caliper)

வெவ்வேறான பொருட்களின் நீளம் மற்றும் அகலம் ஆகிய வெளி அளவுகளையும் உருளை வடிவ கம்பிகளின் விட்டத்தையும் அளக்க வெளியளவு காலிப்பெர் பயன்படுகிறது.

உள்ளளவு காலிப்பர் (Inside Caliper)

பணிப்பொருளில் உள்ள துளையின் உள்விட்டம், மற்றும் உருளை வடிவ பணிப்பொருளின் பள்ளம் (Grooving), அடிவாரப் பள்ளம் (Under Cutting) ஆகிய உள்அளவுகளை அளக்கப் பயன்படுகிறது.

ஜென்னி காலிப்பர் (Jenny Caliper)

இது வட்ட முகப்பின் மையம் காணவும், குறிப்பிட்ட இடைவெளிகளில் இணைகோடுகள் வரையவும் பயன்படுகிறது. ஜென்னி காலிப்பரின் இரண்டு கால்களில் ஒன்றின் முனை வளைவாக இருக்கும். மற்றொன்றின் முனை கூர்மையாக இருக்கும். இதன் கால்கள் ரிவீட் அல்லது ஸ்பிரிங் மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.



வெளியளவு காலிப்பெர் | உள்ளளவு காலிப்பர் | ஜென்னி காலிப்பர்

ரிவீட் வகை:

இவ்வகை காலிப்பரில் இரண்டு கால்களின் தலைப்பாகம் கெட்டியான ரிவீட்டின் மூலம் இணைக்கப்பட்டிருப்பதால் இதற்கு "ரிவீட் வகை காலிப்பர்" என்று பெயர்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 102 1/31/2023 12:19:27 PM

ஸ்பிரிங் காலிப்பர் (Spring Caliper)

இவ்வகை காலிப்பரில் இரண்டு கால்களின் தலைப்பாகம், ஸ்பிரிங் மூலம் இணைக்கப்பட்டிருப்பதால் இவை "ஸ்பிரிங் வகை காலிப்பர்" என அழைக்கப்படுகின்றன.



பாதுகாப்பு குறிப்புகள் :

1. சுழலும் அல்லது சூடான பணிப்பொருட்களை அளக்க பயன்படுத்த கூடாது.
2. எந்த பொருளையும் காலிப்பர் மீது வைக்ககூடாது.
3. சமமான இடத்தில் வைக்க வேண்டும்.

வெர்னியர் காலிப்பர் (Vernier Caliper)

வெர்னியர் காலிப்பர் என்பது நுணுக்கமான அளக்கும் கருவியாகும். இது பிரெஞ்ச் கணித அறிவியல் அறிஞர் பியர் வெர்னியர் என்பவரால் 1830 ஆண்டு வடிவமைக்கப்பட்டது. எனவே இதை வெர்னியர் காலிப்பர் என அவர் பெயராலேயே அழைக்கப்படுகிறது. பொதுவாக வெர்னியர் காலிப்பரின் நுணுக்கம் என்பது மெட்ரிக் முறையில் 0.02 மி.மீ. ஆகும். பிரிட்டிஷ் முறையில் 0.01 அங்குலம் ஆகும்.

வெர்னியர் காலிப்பர் என்பது பொருளின் வெளியளவு, துளையின் உள்விட்டம் மற்றும் துளையின் ஆழம் ஆகியவற்றைக் காண பயன்படுகிறது. இதில் முக்கிய அளவுகோல், வெர்னியர் அளவு கோல் என்ற இரண்டு முக்கிய பாகங்கள் உள்ளன. முக்கிய அளவு கோலின் முன் பகுதியில் நிலைத்தாடை உள்ளது. நகரும் தாடையைக் கொண்டுள்ள வெர்னியர் அளவு கோல் என்பது முக்கிய அளவு கோலின் மேல், நகரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

நிலைத் தாடை மற்றும் நகரும் தாடை ஆகிய இரண்டு தாடைகளுக்கிடையே அளக்க வேண்டிய பொருளை வைத்து, அதன் வெளி அளவுகளை அளக்கலாம். முக்கிய அளவுகோல் மற்றும் வெர்னியர் அளவுகோல் ஆகிய இரண்டும் காட்டும் அளவுகளை குறித்துக்கொள்ள வேண்டும்.

முக்கிய அளவு கோலின் பின்புறம் நீளவாட்டத்தில் குறுகிய பள்ளம் வெட்டப்பட்டு, அதில் ஒரு சிறிய தகடு வெர்னியர் அளவு கோலுடன் சேர்ந்து நகரும்படி அமைக்கப்பட்டிருக்கும். இத்த தகட்டின் மூலம் துளைகளின் ஆழத்தை அளக்கலாம்.

நுணுக்கம்:

ஒரு அளக்கும் கருவியின் நுணுக்கம் என்பது அக்கருவியைக் கொண்டு அளக்கக் கூடிய மிகக் குறைந்த பட்ச அளவைக் குறிக்கும்.



வெர்னியர் காலிப்பர் (Vernier Caliper)

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 103 1/31/2023 12:19:28 PM



வெர்னியர்காலிப்பரின் அளவு = முக்கிய அளவுகோல் பிரிவு + (0.02 X முக்கிய அளவுகோலுடன்

வெர்னியர் அளவுகோல் இணையும் பிரிவு)

= 22.00 + (0.02 X 4)

= 22.00 + 0.08

வெர்னியர்காலிப்பரின் அளவு = 22.08மிமீ.

வெர்னியர் காலிபெரின் மீச்சிற்றளவை (நுணுக்கம்) காணல்.

வெர்னியர்காலிப்பரின் நுணுக்கம் (Least Count)

= 1 மு.அ.பி – 1 வெ.அ.பி

(மு.அ.பி =முக்கிய அளவுகோல் பிரிவு,
வெ.அ.பி = வெர்னியர் அளவுகோல் பிரிவு)

கணக்கு

ஒரு வெர்னியர் காலிபரின் முக்கிய அளவுகோலில் மில்லிமீட்டர் கோடுகளிடப்பட்டுள்ளன. முக்கிய அளவுகோலில் 49 பிரிவு தூரத்தை எடுத்து, வெர்னியர் அளவுகோலில் 50 சமபாகங்களாக பிரிக்கப்பட்டிருப்பின் அதன் நுணுக்கம் என்ன?

முக்கிய அளவுகோலில் ஒரு சிறுபிரிவின் மதிப்பு
= 1 மி.மீ

வெர்னியர் அளவுகோலில்

ஒரு சிறுபிரிவின் மதிப்பு $= = \frac{49}{50}$ மி.மீ

வெர்னியர் காலிபரின் நுணுக்கம் =
1 மு.அ.பி. – 1வெ.அ.பி

$$= 1 - \frac{49}{50}$$

$$= \frac{50 - 49}{50} = \frac{1}{50}$$

வெர்னியர் காலிபரின் நுணுக்கம்= 0.02 மி.மீ

வெர்னியர் உயர அளவி (Vernier Height Gauge)

பணிப்பொருட்களின் உயரத்தை காணவும், தேவையான உயரத்திற்கு நுணுக்கமாக கோடுகள் வரையவும் வெர்னியர் உயர அளவி பயன்படுகிறது. இதன் நுணுக்கம் மெட்ரிக் முறையில் 0.02 மி.மீ. மற்றும் பிரிட்டிஷ் முறையில் 0.01 அங்குலம் ஆகும்.



வெர்னியர் உயர அளவி (Vernier Height Gauge)

1. அடிப்பாகம்
2. தூண்பாகம்
3. நகற்றி
4. முடுக்கும் மரையாணி
5. வெர்னியர் அளவுகோல்
6. நுணுக்க நகற்றி
7. வருகு ஊசி
8. பிடிப்பான்
9. நுணுக்க நகற்றி மரையாணி
10. முக்கிய அளவுகோல்

இதன் அடிப்பாகம் எஃகினால் ஆனது. இது நுணுக்கமாக இயந்திரப்பணி செய்யப்பட்டிருக்கும். அடிப்பாகத்திற்கு செங்குத்தாக அளவுக் கோடிடப்பட்ட முக்கிய அளவுகோல் பொருத்தப்பட்டிருக்கும். முக்கிய அளவு கோலின் வழியே, மேலும் கீழும் நகரும்படி வெர்னியர் அளவுகோல் பொருத்தப்பட்டிருக்கும். இந்த வெர்னியர் அளவு கோலின் முன்பக்க தாடையில் வருகுஊசி (Scriber) ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

வெர்னியர் அளவுகோலை குறிப்பிட்ட உயரத்தில் நிலையாக நிறுத்த மரையாணி வசதி உள்ளது. வெர்னியர்அளவு கோலைத் துல்லியமாக நகர்த்துவதற்கு, நுணுக்கநகற்றி (Fine Adjustment)

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 104 1/31/2023 12:19:29 PM

ஒன்று, வெர்னியர் அளவுகோல் மரையாணி மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

வெர்னியர் உயர அளவியைப் பயன்படுத்தும் போது சர்ஃபேஸ் பிளேட் மீது வைத்து பயன்படுத்த வேண்டும். அதற்கு எதிரே ஆங்கிள் பிளேட்டில் பணிப்பொருளைப் படியவைத்து அளக்க வேண்டும்.

7.4.4. மைக்ரோ மீட்டர்

மைக்ரோ மீட்டர் என்பது மிகவும் நுணுக்கமாக அளக்கும் கருவிகளில் முக்கியமான ஒன்றாகும். சிறிய பணிப்பொருட்களின் நீளம், அகலம் மற்றும் தடிமன் ஆகியவற்றை அளக்கவும் சிறு கம்பி, வயர் ஆகியவற்றின் விட்டத்தை காணவும் மைக்ரோ மீட்டர் பயன்படுகிறது. மெட்ரிக் அளவில் 0.01மிமீ நுணுக்கமாகவும் பிரிட்டிஷ் அளவில் 0.001 அங்குலம் நுணுக்கமாகவும், அளக்க மைக்ரோ மீட்டர் பயன்படுகிறது. இவ்வாறு இது பொருளின் வெளியளவுகளை அளக்க பயன்படுவதால் இவ்வகை மைக்ரோ மீட்டர் வெளியளவு மைக்ரோ மீட்டர் என்று அழைக்கப்படுகிறது.



1. ஆன்வில்
2. ஸ்பிண்டில்
3. பூட்டும் மரையாணி
4. முக்கிய அளவுகோல்
5. திம்பிள் அளவுகோல்
6. ரேட்சட்
7. U–வடிவ சட்டம்

இந்த 'U'– ஃபிரேமின் வலது முனையில் 'சிலீவ்' எனப்படும் வெற்றிடக் குழாய் ஒன்று பொருத்தப்பட்டுஅதன்உட்புறம்மரையிடப்பட்டுள்ளது. சிலீவின் மேற்புறம் அளவுகள் குறிக்கப்பட்டுள்ளது. இதனை முக்கிய அளவுகோல் என்கிறோம்.

மரையிடப்பட்ட ஸ்பிண்டில் ஒன்று குழாய் வடிவ (Thimble) திம்பிள் உடன் இணைக்கப்பட்டிருக்கும். திம்பிளை திருகினால் ஸ்பிண்டிலானது ஆன்விலை நோக்கி நகரும். திம்பிளின் வெளி முனையில் உள்ள சரிவின் சுற்றுப் பரப்பில் அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இதற்கு 'திம்பிள் அளவுகோல்' என்றுபெயர்.

திம்பிளின் பின் முனையில் 'ரேட்சட்ஸ்டாப்' இணைக்கப்பட்டிருக்கும். ரேட்சட் ஸ்டாப்பை திருகும் போது குறிப்பிட்ட அழுத்தத்திற்கு மேல் திருகினால் நழுவல் ஏற்பட்டு, ஸ்பிண்டில் நகருவதை தடுக்கிறது. எனவே, நுணுக்கமாக அளக்கலாம்.

மைக்ரோ மீட்டரில் திம்பிளை ஒரு முழுச்சுற்று சுற்றும் பொழுது, ஸ்பிண்டில் நகரும் தூரம் அதன் மரையிடைத் தூரம் எனப்படும்.

மெட்ரிக் மைக்ரோ மீட்டரின் மீச்சிற்றளவு

திம்பிளில் மொத்தம் 50 பிரிவுகள் உள்ளன. மெட்ரிக் மைக்ரோ மீட்டரில் திம்பிளை ஒரு முழுச்சுற்றி சுற்றினால், ஸ்பிண்டிலானது 0.5மிமீ தூரம் நகரும்.

சூத்திரம்

மைக்ரோமீட்டரின் மீச்சிற்றளவு =

$$\frac{\text{மரையிடத்தூரம்}}{\text{திம்பிள் அளவு கோலில் உள்ள மொத்த பிரிவுகள்}}$$

$$= \frac{0.5}{50} = \frac{5}{500} = \frac{1}{100}$$

= 0.01 மிமீ

மைக்ரோமீட்டரின் மீச்சிற்றளவு = 0.01 மிமீ.

பிரிட்டீஷ் மைக்ரோ மீட்டரின் மீச்சிற்றளவு

பிரிட்டிஷ் மைக்ரோ மீட்டரின்முக்கிய அளவு கோலில் ஒரு அங்குல தூரத்தில் 40 மரைகள் உள்ளன. திம்பிளை ஒரு முழுச் சுற்று, சுற்றும் போது ஸ்பிண்டிலானது 1/40 அங்குல தூரம் நகரும். திம்பின் அளவு கோல் மொத்தம் 25 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் மீட்டரின் மீச்சிற்றளவு

$$= \frac{\text{மரையிடத்தூரம்}}{\text{திம்பிள் அளவு கோலில் உள்ள மொத்த பிரிவுகள்}}$$

$$= \left(\frac{1/40}{25}\right) = \frac{1}{40} \times \frac{1}{25}$$

$$= \frac{1}{1000}$$

பிரிட்டிஷ் மீட்டரின் மீச்சிற்றளவு = 0.001 அங்குலம்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 105 1/31/2023 12:19:30 PM

மைக்ரோமீட்டரில் உள்ள பிழை

மைக்ரோமீட்டரில் சிலீவ், திம்பிள் இரண்டின் அளவுகளும் பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஆன்வில் முனையும், ஸ்பிண்டில் முனையும் ஒன்றை ஒன்று தொடும் பொழுது, இரு பூஜ்ஜியக் கோடுகளும் ஒரே நேர்க்கோட்டில் இணைய வேண்டும். அவ்வாறு இல்லை எனில், மைக்ரோமீட்டரில் பிழை உள்ளது. இது இரண்டு வகைப்படும்.

அவை பின்வருமாறு

1. கூட்டுப்பிழை
2. குறைப்பிழை

கூட்டுப்பிழை

ஆன்வில் முனையும், திம்பின் முனையும் தொட்டுக்கொள்ளும் போது, முக்கிய அளவு கோலில் உள்ள பூஜ்ஜியமும், திம்பிளில் உள்ள பூஜ்ஜியமும் முன்கூட்டியே சந்திக்காமல் நின்றுவிட்டால் இதற்கு கூட்டுப் பிழை என்று பெயர். இரு பூஜ்ஜியக் கோடுகளுக்கு இடையே உள்ள பிரிவுகள்தான் கூட்டுப் பிழை ஆகும். இவ்வாறு கூட்டுப்பிழை உள்ள மைக்ரோமீட்டரில் எடுக்கப்பட்ட அளவுகளிலிருந்து, கூட்டுப் பிழை பிரிவுகளை கழிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு கணக்கு

0.03 மிமீ கூட்டுப் பிழை உள்ள மைக்ரோ மீட்டர் மூலம் ஒரு பணிப்பொருளை அளந்த போது கிடைத்த அளவு 15.12 மிமீ எனில், அப்பணிப்பொருளின் சரியான அளவு என்ன?

மைக்ரோமீட்டர் காட்டிய அளவு = 15.12 மிமீ

கூட்டுப்பிழையில்உள்ளஅளவு = (–) 0.03 மிமீ

பணிப்பொருளின்சரியானஅளவு = 15.09 மிமீ

குறைப்பிழை

ஆன்வில் முனையும், திம்பிள் முனையும் தொட்டுக் கொள்ளும்போது, முக்கிய அளவு கோலில் உள்ள பூஜ்ஜியமும், திம்பிளில் உள்ள பூஜ்ஜியமும் சந்திக்காமல் தாண்டிவிட்டால் அதற்கு குறைப்பிழை என்று பெயர். இரு பூஜ்ஜியக் கோடுகளுக்கு இடையே உள்ள பிரிவுகள்தான் குறைப் பிழை ஆகும். இவ்வாறு குறைப்பிழை உள்ள மைக்ரோ மீட்டர் மூலம் எடுக்கப்பட்ட அளவுகளிலிருந்து குறைப்பிழை பிரிவுகளை கூட்ட வேண்டும்.

வெர்னியர் காலிப்பருக்கும், மைக்ரோ மீட்டருக்கும் உள்ள வேறுபாடுகள்

எண்	வெர்னியர் காலிப்பர்	மைக்ரோ மீட்டர்
1	ஒரு பொருளின் வெளியளவு, உள்ளளவு மற்றும் ஆழம் ஆகிய மூன்று அளவுகளையும் ஒரே வெர்னியர் காலிப்பர் மூலம் அளக்க முடியும்	ஒரு பொருளின் வெளி அளவை அளக்க, வெளியளவு மைக்ரோமீட்டரும், துளையின் விட்டத்தை அளக்க உள் அளவு மைக்ரோ மீட்டரும் துளையின் ஆழத்தை அளக்க ஆழ மைக்ரோ மீட்டரும் பயன்படுகிறது.
2	பொதுவாக, வெர்னியர் காலிப்பரின் நுணுக்கம் மெட்ரிக் முறையில் 0.02 மிமீ மற்றும் பிரிட்டிஷ் முறையில் 0.01 அங்குலம் ஆகும்.	பொதுவாக, மைக்ரோ மீட்டரின் நுணுக்கம் மெட்ரிக் முறையில் 0.01 மிமீ மற்றும் பிரிட்டிஷ் முறையில் 0.001 அங்குலம் ஆகும்.
3	வெர்னியர் காலிப்பரின் முக்கிய அளவு கோலின் மேல்பக்கம் அங்குல அளவும் கீழ் பக்கம் மிமீ, அளவும் குறிக்கப்பட்டிருப்பதால் ஒரே வெர்னியர் காலிப்பரிலேயே மிமீ (அ) அங்குல அளவை ஒரே சமயத்தில் அளக்கலாம்.	மில்லி மீட்டரில் அல்லது அங்குலத்தில் அளக்க வெவ்வேறுதனித்தனி மைக்ரோ மீட்டர்கள் தேவை.
4	1200 மிமீ வரை கூட ஒரே வெர்னியர் காலிப்பரை பயன்படுத்தலாம்.	அளக்க வேண்டிய அளவைப் பொருத்து வெவ்வேறு அளவுகளில் தனித்தனி மைக்ரோ மீட்டர்கள் கிடைகின்றன. (எ.டு) 0 –25 மிமீ, 26 –50 மிமீ, 51–75 மிமீ
5	நிலைத்தாடை, நகரும் தாடை ஆகியன ஒன்றை ஒன்று தொடுதலை அவ்வளவு துல்லியமாக உணர முடியாததால் அளக்கும் அளவில் சிறுமாறுதல்கள் ஏற்படலாம்.	ரேட்சட் மூலம் ஸ்பிண்டில் நகர்வது கட்டுப்படுத்தப்படுவதால் எடுக்கப்படும் அளவு துல்லியமாக அமைகிறது.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 106 1/31/2023 12:19:30 PM

எடுத்துக்காட்டுகணக்கு

0.04மிமீகுறைபிழைஉள்ளமைக்ரோமீட்டர்மூலம் ஒரு பணிப்பொருளை அளந்த போது கிடைத்த அளவு 9.14 மிமீ எனில், அப்பணிப்பொருளின் சரியான அளவு என்ன?

மைக்ரோமீட்டர்காட்டியஅளவு = 9.14 மிமீ

குறைப்பிழையில்உள்ளஅளவு = (+) 0.04 மிமீ

பணிப்பொருளின்சரியானஅளவு = 9.18 மிமீ

பிழையை சரிசெய்தல்

மைக்ரோ மீட்டருடன் கொடுக்கப்பட்டுள்ள 'C' – ஸ்பேனரில் உள்ள முன்முனையை சிலீவில் உள்ள சிறு துவாரத்தில் செலுத்தி திருகி சரி செய்யலாம்.

மைக்ரோ மீட்டரில் அளவு காணல்



மைக்ரோ மீட்டரின் அளவு = முக்கிய அளவுகோல் பிரிவு + (0.01 X முக்கிய அளவு கோலுடன் திம்பிள் அளவு கோல் இணையும் பிரிவு)

= 2.50 + (0.01 X 25)

= 2.50 + 0.25

மைக்ரோ மீட்டரின் அளவு =2.75 மிமீ.

அளவிகள்(Gauges)

அளவிகள் என்பது ஏற்கனவே தயார் நிலையில் உள்ள (Readymade) ஆயத்த அளவுகருவி ஆகும். இது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தயாரிக்கப்பட்டிருக்கும். இதை பயன்படுத்தி பொருட்களின் அளவு, வடிவம் ஆகியவை சரியாக உள்ளதா என ஆய்வு செய்யலாம். அளவிகள் கலவை உருக்கு உலோகத்தால் (Alloy Steel) செய்யப்பட்டு, சூட்டுவினையால் (Heat treatment) குணமாற்றம் செய்து தேவையான துல்லியத்திற்கு அரைப்பு செய்யப்பட்டிருக்கும்.

நன்மைகள்

1. விரைவாக, எளிதாகசோதிக்கலாம்
2. நுணுக்கமான கருவிகளைப் பயன்படுத்துவதைவிட அளவிகள் பயன்படுத்தினால் செலவு குறைவு
3. திறமையற்றவர்களும் அளவிகளைப் பயன்படுத்தி சோதனை செய்யலாம்.
4. மேற்பார்வையாளர்கள் தேவை இல்லை
5. உற்பத்தி அதிகரிக்கிறது.

அளவிகளின் தரம்

அளவிகள் கலவை உருக்கால் செய்யப்பட்டு கடினப்படுத்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டிருக்கும்.

அளவிகள் மூன்று தரங்களில் உருவாக்கப்பட்டிருக்கும். அவையாவன :

1. பணிமனை அளவி (Workshop Gauge)
2. ஆய்வு அளவி (Inspection Gauge)
3. அதிநுணுக்க தலைமைஅளவி (Master Gauge)

பணிமனை அளவி (Work Shop Gauge)

இது, பணிமனைகளில், குறைந்த நுணுக்கத்துடன் உருவாக்கப்பட்ட பொருட்களை சோதனை செய்ய உதவுகிறது. இதன் மூலம் 0.001 அங்குலம் அல்லது 0.025 மிமீ வரை துல்லியமாக சோதனை செய்யலாம்.

ஆய்வு அளவி (Inspection Gauge)

ஆய்வு அளவிகள் என்பது பணிமனைகளில் பயன்படுத்தவும், நுணுக்கமான அளவுகளைச் சோதனை செய்யவும், திறமை மிக்கவர்கள், கையாளவும் உருவாக்கப்பட்டதாகும்.

இதில் 0.0001 அங்குலம் முதல் 0.0025 மிமீ வரை துல்லியமாக அளக்கலாம்.

அதிநுணுக்க தலைமை அளவி (Master Gauge)

இவ்வகையான அளவிகள், பணிமனை அளவிகள் மற்றும் ஆய்வு அளவிகள் இரண்டையும் சோதனை செய்ய உதவுகிறது. மேலும் மிகமிக துல்லியமாக கருவிகளை ஆய்வு செய்யவும், 0.00001 மிமீ முதல் 0.00025 மிமீ வரை துல்லியமாக அளக்கவும் இந்த அளவிகள் பயன்படுகிறது.

அளவிகளின்வகைகள்

அளவிகள், என்பது அதன் வரையறை, நுணுக்கம், வடிவம் ஆகியவற்றிற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. சிலிப்கேஜ்
2. ரேடியஸ்கேஜ்

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 107 1/31/2023 12:19:30 PM

3. டெப்த்கேஜ்
4. லிமிட்கேஜ்
   அ. பிளக்கேஜ்
   ஆ. ரிங்கேஜ்
   இ. சிநாப்கேஜ்
5. பிளேட் மற்றும் ஒயர் கேஜ்
6. பீலர் கேஜ்
7. டெலஸ்கோபிக்கேஜ்
8. டெம்பிளேட்கேஜ்

ரேடியஸ் கேஜ் (Radius Gauge)

பணிப்பொருளின் வெளி ஆரத்தை அளக்க உதவும் கருவிக்கு ரேடியஸ் கேஜ் என்றுபெயர். இதன் அளக்கும் முனை பகுதியானது குழிந்த முகப்பு உடையது.



ரேடியஸ் கேஜ் (Radius Gauge)

பிளேட் மற்றும் ஒயர்அளவி

உலோகத் தகட்டின் தடிமனைக் காண பிளேட் அளவியும் மற்றும் சிறு கம்பிகளின் விட்டம் காண ஒயர் அளவியும் பயன்படுகிறது. இந்த அளவி 0.23 மிமீ முதல் 3 மிமீ வரையுள்ள தகடுகளை அளக்கவும் 0.1 மிமீ முதல் 10 மிமீ வரையுள்ள கம்பிகளின் விட்டத்தை அளக்கவும் பயன்படுகிறது.



பிளேட் மற்றும் ஒயர்அளவி

பீலர்அளவி (Feeler Gauge)

ஃபிலர் கேஜைப் பயன்படுத்தி பொருத்தப்பட்ட இரண்டு பொருட்களுக்கிடையே உள்ள சிறிய இடைவெளியை ஆய்வு செய்யலாம். இவை மெல்லிய தகடுகளில் வெவ்வேறு அளவுகளில் உருவாக்கப்பட்டு, ஒரு கூட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும். தகடுகளின் தடிமன் 0.03 மிமீ முதல் 1.0 மிமீ வரை காணப்படுகிறது.



பீலர்அளவி (Feeler Gauge)

வடிவத் தகடு (Template)

வடிவத் தகடு என்பது ஒரே மாதிரியான பொருட்களை ஏராளமான அளவில் உற்பத்தி செய்யும் போது, அதே வடிவத்தில், அதே அளவில் மெல்லிய எஃகு தகட்டினால் மாதிரி உருவம் தயாரித்தல் ஆகும். இதைக் கொண்டு செய்து முடிக்கப்பட்ட பொருளின் வடிவத்தையும், அளவையும், விரைவாக குறைந்த நேரத்தில் அளக்கலாம்.



வடிவத் தகடு (Template)

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 108 1/31/2023 12:19:31 PM

சொற்களஞ்சியம்

1.	Assembling	ஒன்று சேர்த்தல்
2.	Dismantling	பிரித்தல்
3.	Vice	பிடிப்பான்
4.	Jaw	தாடை
5.	Taper	சரிவு
6.	Adjacent	அடுத்துள்ள
7.	Diagonal	மூலை விட்டம்
8.	Edge	முனை
9.	Scraper	சுரண்டி
10.	Contour	மேடு பள்ளமான (அ) கரடுமுரடான
11.	Scribing	கீறி கோடிடுதல்
12.	Precision	துல்லியமான
13.	Burr	பிசிறு
14.	Gauge	அளவி
16.	Ratchet	ஒரு வழித்தட பற்சக்கரம்

வினாக்கள்

பகுதி அ
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

(1 மதிப்பெண்)

1. V – வடிவ தாடை கொண்ட பிடிப்பான்

அ. லெக் வைஸ்

ஆ. ஹேண்ட் வைஸ்

இ. பைப் வைஸ்

ஈ. பின் வைஸ்

2. குழிந்த மற்றும் குவிந்த (வளைவான) பரப்புகளை தேய்க்க பயன்படும் அரம்

அ. தட்டையான அரம்

ஆ. சதுர வடிவ அரம்

இ. முக்கோண வடிவ அரம்

ஈ. அரை வட்ட வடிவ அரம்

3. V – வடிவ பள்ளங்களை தேய்ப்பதற்கு பயன்படும் அரம்.

அ. சதுர வடிவ அரம்

ஆ. முக்கோண வடிவ அரம்

இ. தட்டையான அரம்

ஈ. அரை வட்ட வடிவ அரம்

4. 40 முதல் 60 பற்கள் கொண்ட அரம்

அ. கடினமான அரம்

ஆ. இரட்டை வெட்டு முனை அரம்

இ. மிருதுவான அரம்

ஈ. மிக மிருதுவான அரம்

5. சிறு ஒயர்களை இறுக்கமாக பிடிப்பதற்கும் மற்றும் வெட்டித் துண்டாக்குவதற்கும் பயன்படும் கைக் கருவி

அ. ஸ்குரூ டிரைவர்

ஆ. பிளையர்

இ. ஸ்பேனர்

ஈ. சுத்தியல்

6. உருளை வடிவ கம்பியின் முகப்பில் மையம் காண உதவும் கைக்கருவி

அ. வெளியளவு காலிபர்

ஆ. ஜென்னி காலிபர்

இ. உள்ளளவு காலிபர்

ஈ. பங்கிடும் கருவி

7. 30° கோண அளவு கொண்ட புள்ளிகுத்தும் கம்பியின் பெயர்

அ. மைய புள்ளி குத்தும் கம்பி

ஆ. அளவு புள்ளி குத்தும் கம்பி

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 109 1/31/2023 12:19:31 PM

இ. கூர்முனை கொண்ட புள்ளி குத்தும் கம்பி

ஈ. ஆழப்புள்ளி குத்தும் கம்பி

8. கடைசல் இயந்திரத்தில் உருளை வடிவ கம்பிகளின் மையம் காண உதவும் கருவி

அ. மார்க்கிங் டேபிள்

ஆ. அனைத்திற்கும் ஏற்ற சர்பேஸ் கேஜ்

இ. V – பிளாக்

ஈ. ஆங்கிள் பிளேட்

9. வெர்னியர் காலிப்பரின் மீச்சிற்றளவு (நுணுக்கம்)

அ. 0.01 மிமீ ஆ. 0.02 மிமீ

இ. 0.001 மிமீ ஈ. 0.1 மிமீ

10. ஆன்வில் மற்றும் திம்பிள் ஆகிய பாகங்கள் காணப்படும் அளக்கும் கருவி

அ. வெர்னியர் காலிபர்

ஆ. வெர்னியர் உயர அளவி

இ. மைக்ரா மீட்டர்

ஈ. ரேடியஸ் கேஜ்

பகுதி ஆ
ஓரிரு வரிகளில் விடையளிக்க

(3 மதிப்பெண்கள்)

11. பிடிப்பான் (வைஸ்) என்றால் என்ன?

12. அரத்தின் தரத்தைப் பொறுத்து அதன் வகைகளை கூறுக.

13. டேப் (Tap) என்றால் என்ன?

14. மையப் புள்ளி குத்தும் கம்பி (Centre Punch) என்பது யாது?

15. "ஆங்கிள் பிளேட்" என்றால் என்ன?

16. அளவுகோலின் வகைகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

17. வெர்னியர் காலிபரின் மூலம் துளையின் ஆழத்தை எவ்வாறு அளக்கலாம்?

18. மைக்ரோ மீட்டரின் கூட்டுப்பிழை என்றால் என்ன?

19. மைக்ரோ மீட்டரின் குறைப்பிழை என்றால் என்ன?

20. அளவிகளின் தரங்களின் (Grades of Gauges) வகைகள் யாவை?

பகுதி இ
ஒரு பக்க அளவில் விடையளிக்க

(5 மதிப்பெண்கள்)

21. ஒரு வெர்னியர் காலிபரின் முக்கிய அளவுகோலில் மிமீ கோடுகள் உள்ளது. முக்கிய அளவு கோலில் 49 பிரிவு தூரத்தை எடுத்து, வெர்னியர் அளவுகோலில் 50 சம பாகங்களாக பிரிக்கப்பட்டிருப்பின் அதன் நுணுக்கம் என்ன?

22. மெட்ரிக் மைக்ரா மீட்டரில் திம்பிளை ஒரு முழுச்சுற்று சுற்றினால் ஸ்பிண்டிலானது 0.5 மிமீ தூரம் நகரும். திம்பிளில் மொத்தம் 50 பிரிவுகள் உள்ளன எனில் அதன் நுணுக்கம் யாது?

23. அளவிகளின் நன்மைகள் யாவை?

24. அளவிகளின் வகைகள் யாவை?

25. ஆக்சா பிளேடு உடைவதற்கான காரணங்களையும், பற்கள் மழுங்குவதற்கான காரணங்களையும் கூறுக.

26. டேப்பை (Tap) பயன்படுத்தி உள் மரையிடும் முறையை படத்துடன் விளக்குக?

27. மூலை மட்டக் கருவியின் (Try Square) அமைப்பை படம் வரைந்து விளக்குக?

28. சாதாரண சர்பேஸ் கேஜின் படம் வரைந்து அதன் அமைப்பை விளக்குக?

பகுதி ஈ
விரிவான விடையளிக்க

(10 மதிப்பெண்கள்)

29. வெர்னியர் உயர அளவியின் படம் வரைந்து அதன் அமைப்பை விளக்குக?

30. வெர்னியர் காலிபரின் படம் வரைந்து அதன் அமைப்பை விளக்குக?

31. வெளியளவு மைக்ரா மீட்டரைப் பற்றி படம் வரைந்து விளக்குக?

32. வெர்னியர் காலிப்பருக்கும், மைக்ரா மீட்டருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

33. அரங்களின் வகைகளை படத்துடன் விவரி?

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 110 1/31/2023 12:19:31 PM

பாடம்
8

இணைப்புப் பொருட்கள்

கற்றலின் நோக்கம்

- போல்ட்டுகள், நட்டுகள், வாஷர்கள் மற்றும் மரையாணிகள் போன்ற இணைப்பு பொருட்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- மரைகள், மரையின் வகைகள் மற்றும் அதன் பயன்களை பற்றி அறிந்து கொள்ளுதல்.
- மரையின் குறியீடுகள் மற்றும் கோணங்களை அறிந்து கொள்ளுதல்.
- சாவி, சாவிப் பள்ளங்கள் அதன் பயன்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

8.1. அறிமுகம்
8.2. இணைப்பு பொருட்களின் வகைகள்
8.3. போல்ட்டுகள்
8.4. நட்டுகள்
8.5. மரை
8.6. வாஷர்கள்
8.7. சாவிகள் மற்றும் சாவிப்பள்ளங்கள்

8.1. அறிமுகம்

- இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இயந்திரம் அல்லது இயந்திர பாகங்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்கோ அல்லது பிடிப்பதற்கோ பயன்படும் பொருட்களுக்கு இணைப்பு பொருட்கள் என்று பெயர்.
- பல உதிரிபாகங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து இயந்திரங்கள், வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் உருவாக்கப்படுகிறது.
- போல்ட் மற்றும் நட், திருகுகாணி (Screw), குடையாணி (Rivet), கடையாணிகள் (Cotters), சாவி மற்றும் சாவி பள்ளங்கள் (Key and keyways), இணைப்புகள் (Couplings), பற்றிணைத்தல் (Welding), சால்டரிங் (Soldering), போன்ற முறைகளில் பல்வேறு இயந்திரங்களையும் மற்ற பாகங்களையும் இணைக்க பயன்படுகிறது.

8.2. இணைப்பு பொருட்களின் வகைகள் (TYPES OF FASTENERS)

இயந்திர பாகங்களை மறுபடியும் பிரிக்ககூடிய முறை, பிரிக்க இயலாத முறை என்பதை அடிப்படையாக கொண்டு இணைப்பு பொருட்களை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். அவையாவன

1. தற்காலிக இணைப்பு பொருட்கள் (Temporary Fasteners)
2. நிரந்தர இணைப்பு பொருட்கள் (Permanent Fasteners)

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 111 28-04-2022 15:27:50

8.2.1. தற்காலிக இணைப்புகள் (Temporary Fasteners)

இணைக்கப்பட்ட இருபாகங்களை எவ்வித சேதமுமின்றி எளிதில் பிரிக்ககூடிய முறைக்கு தற்காலிக இணைப்புகள் என்று பெயர்

எ.கா: திருகாணிகள் (Screws), போல்ட்டுகள் (Bolts), நட்டுகள் (Nuts), ஸ்டட்ஸ் (Studs), சாவிகள் (Keys) மற்றும் இணைப்புகள் (Coupling) போன்றவை தற்காலிக இணைப்புப் பொருட்கள் ஆகும்.

8.2.2. நிரந்தர இணைப்புகள் (Permanent Fasteners)

இணைக்கப்பட்ட இரு பாகங்களை எவ்வித சேதமுமின்றி பிரிக்கமுடியாத இணைப்பிற்கு நிரந்தர இணைப்புகள் என்று பெயர்

எ.கா.: பற்றிணைத்தல்(Welding), குடையாணி இணைப்பு (Rivet) மற்றும் சால்டரிங்(Soldering) போன்றவை நிரந்தர இணைப்பு முறைகள் ஆகும்.

8.2.3. தற்காலிக மற்றும் நிரந்தர இணைப்பு இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு

தற்காலிக இணைப்பு	நிரந்தர இணைப்பு
பாகங்களை சேதமின்றி பிரிக்கலாம்.	பாகங்களை பிரிக்க இயலாது. பொருள் சேதமடையும்
தேய்ந்த பாகங்களை மாற்றிக் கொள்ளலாம்.	மாற்ற இயலாது.
இணைத்தல், பிரித்தல் எளிது	இணைத்தல், பிரித்தல் கடினம்
இணைப்பின் வலிமை குறைவு	இணைப்பின் வலிமை அதிகம்
செலவு குறைவு	செலவு அதிகம், பண விரையம்

8.3. போல்ட்டுகள் (BOLTS)

போல்ட் என்பது வெளிமரையிடப்பட்ட உருளை வடிவ இரும்பு தண்டு ஆகும். இது இரண்டு வெவ்வேறு பாகங்களை இணைப்பதற்கு பயன்படுகிறது.



போல்ட்

8.3.1. போல்ட்டின் பாகங்கள்

போல்ட் என்பது இரண்டு பாகங்களைக் கொண்டது. அவை காம்பு(Shank) மற்றும் தலைப்பகுதி(Head) ஆகும்.

காம்பு(Shank)

போல்ட்டின் தலைப்பகுதிக்கும், மரையிடப்பட்ட பகுதிக்கும் இடையில் உள்ள மரையற்ற பகுதியாகும். இது மரையின் வெட்டுத்திறனை அதிகரிக்க உதவுகிறது.

மரை(Thread)

போல்ட்டின் உருளைவடிவ பகுதியில் வெட்டப்பட்டிருக்கும் சுருள்வடிவ பள்ளம் மரை ஆகும்.

தலைப்பகுதி (Head)

போல்ட்டினை பொருத்தும் போது இறுக்கிப்பிடிக்க தலைப்பாகம் பயன்படுகிறது. தலைப்பாகத்தின் வடிவம் அதன் உபயோகத்திற்கு (சதுரம் அல்லது அறுங்கோணம்) தகுந்தவாறு மாறுபடும்.

8.3.2. போல்ட்டின் வகைகள்

போல்ட்டின் முக்கிய வகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவை

1. பகுதிமரை போல்ட் (Through Bolt)
2. முழுநீளமரை போல்ட் (Tap Bolt)
3. இருபக்கமரை போல்ட் (Stud Bolt)

1. பகுதிமரை போல்ட் (Through Bolt)

இணைக்கப்படவேண்டிய இரண்டு பாகங்களிலும் முழுமையாக துளையிட்டு அத்துளையின் வழியே போல்டினை செலுத்தி மறுமுனையில் நட்

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 112 28-04-2022 15:27:52

முடுக்கப்பட்டிருக்கும் போல்ட்டிற்கு "பகுதிமரை போல்ட்" என்று பெயர்.



பகுதிமரை போல்ட் (Through Bolt)

2. முழுநீளமரை போல்ட் (Tap Bolt)

இணைக்கப்பட வேண்டிய இரண்டு பாகங்களில் ஒன்றில் நேரான துளையும் (Through hole), மற்றொன்றில் மரையிடப்பட்ட துளையும் இருக்கும். நேரான துளையின் வழியே முழுநீளமரை (Tap Bolt) போல்ட்டை செலுத்தி திருகும் பொழுது, மரையிடப்பட்ட துளையில் போல்ட் இறுக்கமாக நட் இல்லாமல் முடுக்கப்படுகிறது. மரையிடப்பட்ட துளை கொண்ட பாகம் நட் (Nut) ஆக செயல்படுகிறது.



முழுநீளமரை போல்ட் (Tap Bolt)

3. இருபக்கமரை போல்ட் (Stud Bolt)

தலையில்லாத போல்ட்டிற்கு "இருபக்கமரை போல்ட் (Stud Bolt)" என்று பெயர். உருளை வடிவ கம்பியின் மையத்தில் சதுர முகப்பு அல்லது தடுக்கு (Collar) இருக்கும்.



தடுக்கின் வலது, இடது இருபுறமும் மரையிடப்பட்டிருக்கும். ஸ்டட்டின் ஒரு முனை மரையிடப்பட்ட துளைபாகத்தில் திருகப்பட்டும், மற்றொரு முனை நட் மூலம் திருகப்பட்டு, மேல் பாகம் இணைக்கப்படும்.

என்ஜின், பம்பு சிலிண்டர்ஸ், வால்வுகள் ஆகிய பாகங்களை மூட இவ்வகையான ஸ்டட் போல்ட்டுகள் பயன்படுகிறது.

8.4. நட்டுகள் (NUTS)

இணைக்க வேண்டிய இரு பாகங்களை போல்ட் அல்லது ஸ்டட்டின் உதவியுடன் தற்காலிகமாக இறுக்கிப்பிடிக்க "நட்" (Nut) பயன்படுகிறது. போல்ட் அல்லது ஸ்டட் பொறுத்துவதற்கு மரையுடன் கூடிய துளை கொண்ட பாகமாகும்.



நட்டுகள்(Nut)

8.4.1. நட்டின் வகைகள்

நட்டின் முக்கிய வகைகள்

1. நான்கு பக்கம் கொண்ட நட் (Square Nut)
2. ஆறு பக்கம் கொண்ட நட் (Hexagonal Nut)

8.5. மரை

உருளை வடிவ குழாயின் மேற்பரப்பு அல்லது உட்பரப்பில் சம இடைவெளியில் வெட்டப்பட்ட சுருள் பள்ளத்திற்கு (Helical Groove) மரை என்று பெயர்.

8.5.1. மரையின் குறியீடுகளும், கோணங்களும் (Nomenclature of Threads)



XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 113 28-04-2022 15:27:53

பாகத்தின் பெயர்	விளக்கம்
உச்சவிட்டம் (Major Diameter)	ஒரு வெளி மரையின் மேல் மற்றும் கீழ் உச்சிகளுக்கு இடையே உள்ள தூரம் "உச்சவிட்டம்" என்று பெயர். போல்ட்டின் அளவை குறிப்பிட இந்த உச்சவிட்ட அளவையே பயன்படுத்த வேண்டும்.
குறைந்த விட்டம் (Minor Diameter)	எதிரெதிரே உள்ள வெளி மரையின் பள்ளங்களுக்கு இடையே உள்ள குறைந்தபட்ச தூரம் "குறைந்தவிட்டம்" எனப்படும்.
மரையின் உச்சி (Crest)	இது, மரையின் அடுத்தடுத்து உள்ள ஃபிளாங்குகள் இணையும் உச்சி முனையை குறிக்கும்.
அடிப்பள்ளம் (Roots)	இது, மரையின் அடுத்தடுத்து உள்ள ஃபிளாங்குகள் இணையும் அடி முனையை குறிக்கும்.
ஃபிளாங்க் (Flank)	மரையின் உச்சியையும், அடிப்பள்ளத்தையும் இணைக்கும் சாய்வான தட்டை பரப்பு ஆகும்.
மரையின்ஆழம் (Depth the Thread)	அடிப்பள்ளத்தின் அடி முனையில் இருந்து மரையின் உச்சிவரை உள்ள தூரம் "மரையின்ஆழம்" எனப்படும். இது மரையின் அச்சிற்கு செங்குத்தாக அளக்கப்படுகிறது.
மரையிடைதூரம் (Pitch)	ஒரு மரையின் உச்சிக்கும் அடுத்துள்ள மரையின் உச்சிக்கும் இடையே உள்ள தூரம் "மரையிடை தூரம்" எனப்படும். (அல்லது) மரையின் அடிப்பள்ளதிற்கும் அடுத்துள்ள அடிப்பள்ளத்திற்கும் இடையே உள்ள தூரம் "மரையிடை தூரம்" எனப்படும்.
லீட் (Lead)	மரையாணியை ஒரு முழு சுற்று சுற்றும் போது அது நகரும் தூரம் லீட் (Lead) எனப்படும். லீட் என்பது 1/TPI மற்றும் மரையிடை தூரத்திற்கு சமமாகும்.
TPI–Thread Per Inch	TPI என்பது மரையாணியில் ஓர் அங்குல தூரத்தில் எத்தனை மரைகள் உள்ளது என்பதை குறிக்கும்.

8.5.2. மரைகளின் வகைகள் (Types of Threads)

மரைகளை 'V' வடிவ மரை, சதுர வடிவ மரை என்று இருவகைகளாக பிரிக்கலாம். மேலும் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு மரைகளை பிரிக்கலாம்.

வகைகள்	படம்	பயன்பாடுகள்
வலக்கை மரை		போல்ட் மற்றும் நட்
இடக்கை மரை		மிதிவண்டியின் இடதுபக்க பெடல், கலவைக் கருவி (Mixer), மாவு அரைக்கும் இயந்திரம்.
ஒரு புரி மரை		திருகாணி மற்றும் திருகுகொண்ட கொக்கிகள்.
பல புரி மரை		கேட் வால்வுகள், செங்குத்து டரட் லேத், பேனா மூடி
வெளிப்பக்க மரை		திருகாணி, போல்ட் மற்றும் மரையிடும் கருவிகள்(Taps)
உட்பக்க மரை		அனைத்து வகையான நட்டுகள் மற்றும் வெளி மரையிடும் கருவிகள்(Dies)

8.5.3. மரைகளின் வடிவங்கள்

மரையின் வடிவமானது அதன் அச்சின் கட்டமைப்பு பொருத்த வடிவமாகும். இது மரையினுடைய உச்சி பள்ளம் மற்றும் முகப்பு தன்மையை குறிக்கும்.

1. பிரிட்டிஷ் ஸ்டேண்ட்டர்டு விட் வொர்த் மரை (BSW Thread)
2. பிரிட்டிஷ் அசோசியேஷன் மரை (BA Thread)
3. மெட்ரிக் மரை (Metric Thread)
4. அக்மிமரை (Acme Thread)

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 114 28-04-2022 15:27:53

1. பிரிட்டிஷ் ஸ்டேண்ட்டர்டு விட் வொர்த் மரை (BSW Thread)

இம்மரை 'V' வடிவம் போல் இருக்கும். இம்மரையின் கோணம் 55° ஆகும். இயந்திர பாகங்களில் இவ்வகை மரைதான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. BSF (British Standard Fine) மற்றும் BSP (British Standard Pipe) ஆகிய வகை மரைகளின் அமைப்பு BSW வகை மரையைப் போன்று இருக்கும். பிரிட்டிஷ் ஸ்டேண்டர்டு ஃபைன் (BSF) வகை மரைகள் அதிக விசை தேவைப்படும் இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.



பிரிட்டிஷ் ஸ்டேண்ட்டர்டு விட் வொர்த் மரை (BSW Thread)

2. பிரிட்டிஷ் அசோசியேஷன் மரை (BA Thread)

BA மரையின்கோணம் 47 1/2° ஆகும். இது ஒரு நெருக்கமான வகை மரையாகும். இவ்வகை மரை மைக்ரோ மீட்டர், வெர்னியர் காலிப்பர் காலிபெர் போன்ற நுணுக்கமான கருவிகளில் பயன்படுத்தப்படுகிறது.மேலும் 1/4 அங்குலத்திற்கு குறைவான விட்டமுடைய உருளை (Shaft)களில் காணலாம்.



பிரிட்டிஷ் அசோசியேஷன் மரை (BA Thread)

3. மெட்ரிக் மரை (Metric Thread)

மெட்ரிக் மரையின் கோணம் 60° ஆகும். இது இந்திய தர நிர்ணய மரை (Indian Standard Thread) வகையை சார்ந்ததாகும். BSW வகை மரையை போன்றே இருக்கும். கோணம் மட்டும் மாறுபடும். பெரும்பாலும், தொழிற்சாலைகளில் இவ்வகை மரையே பயன்படுத்தப்படுகிறது.



மெட்ரிக் மரை (Metric Thread)

4. அக்மிமரை (Acme Thread)

அக்மிமரை தோற்றத்தில் சதுரமரையைப் போன்றது. இதனுடைய கோணம் 29° ஆகும். சதுர வடிவ மரையைக் காட்டிலும் வலிமை அதிகம் கொண்டது.



அக்மிமரை (Acme Thread)

இவ்வகை மரை கடைசல் இயந்திரம், ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம் ஆகியவற்றில் உள்ள தானாக இயங்கும் லீட்ஸ் ஸ்குருவின்(Lead screw) தண்டுகளில் பயன்படுத்தப்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 115 28-04-2022 15:27:53

8.6. வாஷர்கள்

போல்ட் பொருத்துவதற்காக மையத்தில் துளை கொண்ட உலோக வளையம் வாஷர் எனப்படும். நட்டின் தலை பகுதிக்கும் போல்டின் தலைபாகத்திற்கும் இடையே உள்ள பரப்பில் நட்டானது சரியாக அமைவதற்கு வாஷர் பயன்படுகிறது.



வாஷர்கள்

8.6.1. பயன்கள்

- நட்டானது போல்டின் மீது சமமாக படிவதற்கும்.
- நட் மீது செலுத்தும் அழுத்தம் சீராக அமைவதற்கும்.
- போல்ட்டின் தலை பாகத்தை விட துளை பெரிதாக இருக்கும் பொழுதும் வாஷர் பயன்படுகிறது.

8.6.2. வாஷரின் வகைகள்

வாஷர் இரு வகைப்படும்:

1. சாதாரண வாஷர் (Plain Washer)
2. சுருள்வடிவ வாஷர் (Spring Washer)



8.7. சாவிகள் மற்றும் சாவிப்பள்ளங்கள்

இயந்திரவியல் துறையில், சாவி (Key) என்பது ஒரு இயந்திரத்தின் பாகமாகும். இது உருளை வடிவத் தண்டுடன் (Shaft), பற்சக்கரம் (Gear), ஃபிளாஞ்ஞ் (Flange) ஆகியவற்றுடன் இணைக்கப் பயன்படுகிறது. எனவே, சுழலும் விசை கிடைக்கும் பொழுது உருளை வடிவத்தண்டு மட்டும் சுழலாமல், அதனுடன் இணைக்கப்பட்ட பற்சக்கரம் ஃபிளாஞ்ஞ் பாகமும் சேர்ந்து சுழலும். சாவியில் திருப்பு விசை மற்றும் வெட்டு விசை தகவும் ஏற்படுகிறது எனவே, இது எஃகு உலோகத்தால் செய்யப்படுகிறது.

உருளை வடிவத் தண்டின் (Shaft) மேல்புறமும், கப்பி (Pulley), பற்சக்கரம் (Gear) மற்றும் ஃபிளாஞ்ஞ் (Flange) ஆகியவற்றின் உள்விட்டத்திலும் அச்சுக்கு இணையாக பள்ளம் வெட்டப்பட்டிருக்கும் இதற்கு சாவிப் பள்ளம் (Key Way) என்று பெயர்.





சாவிகள் மற்றும் சாவிப்பள்ளங்கள்

8.7.1. சாவிகளின் வகைகள்



சங்க் சாவி

இது ஒரு வரையறுக்கப்பட்ட சாவியாகும். இதன் குறுக்கு வெட்டுத் தோற்றம் சதுரம் அல்லது செவ்வக முகப்பு கொண்டது.

1. இணைச்சாவி (Parallel key)

இச் சாவியின் குறுக்கு வெட்டுத்தோற்றம் சதுரம் அல்லது செவ்வக வடிவமுடையது. இதன் அகலமும், தடிமனும் முழு நீளத்திற்கும் ஒரே அளவாக இருக்கும்.

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 116 28-04-2022 15:27:54



கப்பி (Pulley), பல்லிணைகள் (Gears) மற்றும் இது போன்ற பாகங்களை அச்சுடன் (Shaft) இணைக்க இச்சாவி பயன்படுகிறது. அதிக சக்தியை கடத்தும் இடங்களில் இவ்வகைச் சாவிபயன்படுகிறது.



இணைச்சாவி (Parallel key)

2. சரிவுச்சாவி (Tapper key)

இந்த சாவி அகலத்தில் ஒரே அளவாகவும் தடிமனில் சரிவாகவும் இருக்கும். இச்சாவியின் அடிப்புறம் நீள்வாட்டத்தில் தட்டையாகவும், மேல்புறத்தில் சரிவாகவும் இருக்கும். இந்த சாவியின் சரிவு 1 : 100 ஆகும்.



1. அச்சு, 2. சாவி, 3. ஃஃபிளான்ஞ்

சரிவுச்சாவி (Tapper key)

3. முனைமேடு கொண்ட சாவி (Gip Headed key)

பொதுவாக சரிவுச் சாவியில் உள்ள சிறிய தடிமனின் வழியாக சுத்தியால் தட்டி சரிவுச் சாவி வெளியேற்றப்படுகிறது. அவ்வாறு இல்லாமல், சரிவுச் சாவி உள்ளடங்கி இருப்பின், சாவியின் முனையில் ஒரு தடுக்கு அல்லது முனை மேடு தரப்பட்டிருக்கும். பழுதுபார்க்கும் பொழுதோ, பராமரிப்பு செய்ய வேண்டிய பொழுதோ இணைப்பில் இருந்து எளிதில் பிரித்தெடுக்க இம்முனை மேடுத் தரப்பட்டுள்ளது.



1. அச்சு, 2. சாவி, 3. ஃஃபிளான்ஞ்

முனைமேடு கொண்ட சாவி (Gip Headed key)

4. ஃபெதர்சாவி (Feather Key)

சுழல் தண்டு, அதனுடன் பொருந்தும் பாகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் திருகாணி மூலம் சாவி நிலையாக பொருத்தப்பட்டிருக்கும்.

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 117 28-04-2022 15:27:54

எனவே, மற்றொரு பாகத்தில் உள்ள சாவி பள்ளம் வழியே இணைந்து சுழலும் தன்மை கொண்டது. இது இணைச்சாவியைப் போன்றது. இதன் வெட்டுத் தோற்றம் செவ்வகம், சதுரம், புறாவால் அல்லது வட்டவடிவில் இருக்கும்.



ஃபெதர்சாவி (Feather Key)

5. உட்ரஃப் சாவி (Wood ruff key)

உட்ரஃப் சாவி என்பது அரை வட்ட வடிவ சாவி ஆகும். இது அரைவட்ட வடிவ இயந்திர சுழல் தண்டில் உள்ள பற்சக்கரம், மைய பாகம் அல்லது வேறு பாகங்கள் தன்னிச்சையாக சுழல்வதை தடுக்க பயன்படுகிறது.



உட்ரஃப் சாவி

சேடில் சாவி (Saddle key)

இவ்வகைச் சாவியின் மேல் பாகம் ஹப் (Hub) பாகத்தில் உள்ள சாவி பள்ளத்தில் பொருந்தும். சாவியின் அடிபாகம் உருளை வடிவக் கம்பி (Shaft)–யில் படியும், உருளையில் (Shaft) சாவிப்பள்ளம் இருக்காது. இது குறைந்த விசையைத் தாங்கும், சுழல் அச்சுக்களை இயக்கப் பயன்படுகிறது.

சேடில் சாவி இரண்டு வகைப்படும்

1. ஹாலோ சேடில் சாவி (Hollow saddle key)
2. தட்டை சேடில் சாவி (Flat saddle key)

1. ஹாலோ சேடில் சாவி (Hollow saddle key)

சேடில் சாவியின் அடிபாகம் குழிந்த பரப்பாக இருக்கும். இதன் மேற்பரப்பு தட்டையாக இருக்கும். குழிந்த பரப்பு சுழல் தண்டிலும், தட்டையான மேற்பரப்பு ஹப்பில் (Hub) உள்ள சாவிப்பள்ளத்திலும் பொருந்தும். இது குறைந்த சக்தியைக் கடத்தும் இணைப்புகளில் பயன்படுகிறது.



ஹாலோ சேடில் சாவி (Hollow saddle key)

2. தட்டை சேடில் சாவி (Flat saddle key)

இதன் குறுக்கு வெட்டுத் தோற்றம் செவ்வக முகப்பு உடையது. ஹப்பில் (Hub) மட்டும் சாவிப் பள்ளம் வெட்டப்பட்டிருக்கும். ஹாலோ சாவியை விட இச்சாவியின் பிடிப்புத் தன்மை அதிகம்.

உருளை சாவி (Round key)

இதன் குறுக்கு வெட்டுப் பரப்பு உருளை வடிவம் கொண்டது. பொதுவாக, இது நீள வாட்டத்தில் சரிவாக இருக்கும். உருளைக் கம்பி (Shaft) மற்றும் ஹப் (Hub) – ல் உள்ள துளையில் இவ்வகைச் சாவி பொருத்தப்படும். இது குறைந்த சக்தி கடத்தும் இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.



1. அச்சு, 2. சாவி, 3. ஃஃபிளான்ஞ்

உருளை சாவி (Round key)

இதில் சரிவு உருளைச் சாவி மற்றும் சரிசம உருளை சாவி என இருவகைகள் உள்ளன.

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 118 28-04-2022 15:27:54

8.7.2. சாவிகளின் முக்கிய அளவுகள்

D – உருளைதண்டின் விட்டம் (Shaft Diameter)

T – சாவியின் தடிமன் (Thickness of the key)

W – சாவியின் அகலம் (Width of the key)

R – சாவியின் ஆரம் (Radius of the key)

L – சாவியின் நீளம் (Length of the key)

d – சாவியின் விட்டம் (Diameter of the key)

சரிவு 1 : 100 என்ற விகிதத்தில் தரப்பட்டிருக்கும்.



சாவிகளின் முக்கிய அளவுகள்

சொற்களஞ்சியம்

Fasteners	இணைப்புப் பொருட்கள்
Helical Groove	சுருள் பள்ளம்
Pulley	கப்பி
Keys	சாவிகள்
Shaft	உருளை தண்டு
Keyway	சாவிப்பள்ளம்

செயல்பாடுகள்

- பல்வேறு வகையான போல்ட்டுகள், நட்டுகள், வாஷர்கள், சாவிகள் ஆகியவற்றை சேகரிக்கவும்

வினாக்கள்

பகுதி அ

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

(1 மதிப்பெண்)

1. நிரந்தர இணைப்புக்கு எடுத்துக்காட்டு
   அ) வெல்டிங் இணைப்பு
   ஆ) திருகு (அ) மரை இணைப்பு
   இ) சாவி இணைப்பு
   ஈ) கப்ளிங் இணைப்பு

2. மரை (அ) போல்ட் இதைக் கொண்டு குறிப்பிடப்படுகிறது
   அ) உச்ச விட்டம்
   ஆ) குறைந்த விட்டம்
   இ) பிட்ச் விட்டம்
   ஈ) மரையிடைத் தூரம்

3. வாஷரின் அளவு பொதுவாக இதைக் கொண்டு குறிப்பிடப்படுகிறது
   அ) வெளி விட்டம்
   ஆ) உள் விட்டம்
   இ) தடிமன்
   ஈ) சராசரி விட்டம்

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 119 28-04-2022 15:27:54

4. சாவி செய்ய பயன்படும் உலோகம்

அ) டங்ஸ்டன்

ஆ) எஃகு

இ) வார்ப்பிருப்பு

ஈ) காரீயம்

5. மெட்ரிக் மரையின் கோணம்

அ) 55° ஆ) 47°

இ) 60° ஈ) 30°

பகுதி ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்க

(3 மதிப்பெண்கள்)

6. மரையிடைத்தூரம் என்றால் என்ன?
7. போல்ட்டின் வகைகளைக் கூறுக
8. சங்க் சாவி வகைகள் யாவை?
9. கீழ்கண்ட மரைகளின் கோணங்களை கூறுக.
   i. பிரிட்டிஷ் ஸ்டேண்ட்டர்டு விட் வொர்த் மரை (BSW Thread)
   ii. மெட்ரிக் மரை (Metric Thread)
   iii. அக்மிமரை (Acme Thread)
10. மரையின் வடிவங்களை கூறுக

பகுதி இ

ஒரு பக்க அளவில் விடையளிக்க

(5 மதிப்பெண்கள்)

11. தற்காலிக மற்றும் நிரந்தர இணைப்பு பற்றி உதாரணத்துடன் விவரி
12. மரையின் வகைகள் மற்றும் பயன்களைக் கூறுக
13. வாஷர் என்றால் என்ன? அதன் பயன்களைக் கூறுக
14. சாவிகளின் வகைகளை கூறுக
15. சாவியின் முக்கிய அளவுகள் யாவை?

பகுதி ஈ

விரிவான விடையளிக்க (10 மதிப்பெண்கள்)

16. தற்காலிக மற்றும் நிரந்தர இணைப்புகளுக்கிடையேயான வேறுபாடுகளை வரிசைப்படுத்துக.
17. ஏதேனும் ஒரு இணைக்கப்பட்ட சாவியின் படம் வரைந்து விளக்குக.
18. மரையின் படம் வரைந்து அதன் குறியீடு மற்றும் கோணங்களையும் (Nomenclature) விவரி.
19. ஏதேனும் இரு மரைகளின் வடிவங்களை வரைந்து விளக்குக

XI_TM_BME_Tamil_Chapter08_2022.indd 120 28-04-2022 15:27:54

பாடம்
9

சுழலும் சக்தியைக் கடத்துதல்

கற்றலின் நோக்கம்

- சுழலும் சக்தியைக் கடத்துதல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- நேர்பட்டை மற்றும் குறுக்கிடும்பட்டை மூலம் சுழலும் சக்தியைக் கடத்துதல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பல்லிணை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

9.1. அறிமுகம்

9.2. சக்தியை கடத்துதல்

9.3. பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல்

9.4. பல்லிணைகள்

9.5. பல்லிணைத் தொடர்

9.6. சுழலும் சக்தியை கடத்துதல் பற்றிய தொகுப்பு



9.1. அறிமுகம்

- இயந்திரங்கள் இயங்குவதற்கு சுழலும் சக்தி மிகவும் இன்றியமையாததாகும். சுழலும் சக்தி மின்மோட்டார் மூலம் பெறப்பட்டு, இயந்திரங்கள் இயக்கிவைக்கப்படுகிறது. சுழலும் சக்தி, பட்டை (Belt), பல்லிணை (Gear), சங்கிலி (Chain), மூலம் ஓர் அச்சிலிருந்தது மற்றொரு அச்சிற்கு கடத்தப்படுகிறது.
- இந்த சுழலும் சக்தி விசையானது தேவைப்படும் இடத்தில் தேவைபடும் இயந்திரங்களில் பல்வேறு வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

9.2. சக்தியை கடத்துதல்(POWER TRANSMISSION)

இடைவெளி அதிகமுள்ள அச்சுகளை இணைக்க பட்டை பயன்படுகிறது. சுழலும் சக்தியை கடத்தும் போது, வேக வழுக்கல் (slip) ஏற்படும். சங்கிலி மூலம் சுழலும் சக்தி கடத்தப்படும் போது வேக வழுக்கல் ஏற்படுவதில்லை.

வேக வழுக்கல் இல்லாமல் கடத்தப்படும் சுழல் விசைக்கு " நிச்சயமான வேக ஓட்டம்" (positive drive) என்று பெயர். பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்தும் போது

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 121 28-04-2022 15:33:21

தளர்ச்சி காரணமாக வழுக்கல் ஏற்பட்டு திட்டமிட்ட வேகத்தில் சுழலாது அதற்கு "நிச்சயமற்ற வேக ஓட்டம்" (non positive drive)என்று பெயர்.



சக்தியை கடத்துதல்(Power Transmission)

சுழலும் சக்தியை கடத்தும் முறைகள்

1. பட்டை முறை (Belt Drive)
2. பல்லிணை முறை(Gear Drive)
3. சங்கிலி முறை (Chain Drive)
4. கிளட்ச் முறை(Clutch Drive)
5. கயிறு முறை(Rope Drive)

9.3. பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் (BELT DRIVE)

அச்சு அல்லது உருளைகளின் மீது பட்டை (Belt) பொருத்தி, எந்த அச்சிலிருந்து சக்தி பெறப்படுகிறதோ, அந்த அச்சிற்கு இயக்கும் உருளை (Driving Shaft) என்றும், அதனுடன் இணைந்து சுழலும் சக்தியை பெறும் அச்சிற்கு இயங்கும் உருளை (Driven Shaft) என்றும் பெயர். உருளைக்கும் பட்டைக்கும் இடையே உள்ள பிடிப்பின் காரணமாக சுழலும் சக்தி ஏற்படுகிறது. பொதுவாக தொழிற்சாலைகளிலும், இயந்திர பணிமனைகளிலும் பட்டை மூலம் சுழலும் சக்தி முறை பயன்படுத்தப்படுகிறது.

9.3.1. பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்தும் முறைகள்

சுழலும் சக்தியை கடத்தும் முறைகள் இரண்டு வகைப்படும் அவை

1. நேர்பட்டை முறை (Open belt drive)
   - அ) சுழலும் சக்தியை எளிய முறையில் கடத்துதல் (Simple belt drive)
   - ஆ) சுழலும் சக்தியை கூட்டு முறையில் கடத்துதல் (Compound belt drive)
2. குறுக்கு பட்டை முறை (Crossed belt drive)

நேர்பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் (Open belt drive)

இரு உருளைகளின் மேல் சுற்றுப்பரப்பில் பட்டை நேராக குறுக்கிடாமல் இணைக்கப்பட்டிருக்கும், முறைக்கு நேர்பட்டை முறை என்று பெயர். பட்டைக்கும் உருளைக்கும் இடையே பிடிப்புத்தன்மை சற்றுக் குறைவு. இம்முறையில் இரு உருளைகளும் ஒரே திசையில் சுழலும். இயங்கும் உருளையானது வலஞ்சுழியாக சுற்றினால் அதனுடன் இணைந்து இயக்கப்படும் உருளையும் வலஞ் சுழியாக சுழலும்.



நேர்பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் (Open belt drive)



சுழலும் சக்தியை எளிய முறையில் கடத்துதல் (Compound belt drive)

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 122 28-04-2022 15:33:23

பட்டை வகைகள்	விளக்கம்	படம்
தட்டை வடிவ பட்டை(Flat Belt)	• தட்டை வடிவப் பட்டையின் குறுக்கு வெட்டு தடிமன் 0.75மி. மீ. முதல் 5மி.மீ. வரை இருக்கும். • தட்டை வடிவப் பட்டையின் சுழலும் சக்தியைக் கடத்தும் திறன் குறைவாக இருக்கும். • இது தட்டை வடிவம் கொண்ட உருளையில் பயன்படுத்தப்படுகிறது. • இரு அச்சுகளுக்கு இடைப்பட்ட தூரம் அதிகமாக இருக்கும் போது தட்டை வடிவ பட்டை பயன்படுத்தப்படுகிறது	
V–வடிவ பட்டை (V–Belt)	• V–வடிவப் பட்டையின் குறுக்கு வடிவ தடிமன் 8 மி.மீ, முதல் 19 மி.மீ, வரை இருக்கும். • இதன் சுழலும் சக்தியைக் கடத்தும் திறன் அதிகமாக இருக்கும். • இது V–வடிவ பள்ளம் கொண்ட உருளையில் பயன்படுத்தப்படுகிறது. • இரு அச்சுகளுக்கு இடைப்பட்ட தூரம் குறைவாக இருக்கும் போது "V" வடிவ பட்டை பயன்படுத்தப்படுகிறது	

குறுக்குப்பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் (Cross belt Drive)

இம்முறையில் இரு உருளைகளும் குறுக்கு வாட்டில் இணைக்கப்பட்டிருக்கும். இம்முறையில் உருளைக்கும் பட்டைக்கும் இடையே ஏற்படும் பிடிப்புத்தன்மை (Grip) அதிகம்.



குறுக்குப்பட்டை மூலம் சுழலும் சக்தியை கடத்துதல் (Cross belt Drive)

இரு உருளைகளும் எதிரெதிர் திசையில் சுழலும். இயங்கும் உருளை வலஞ்சுழியாக சுற்றினால் இயக்கப்படும் உருளை இடஞ்சுழியாக சுழலும். பட்டை தளர்ச்சியடைந்து விட்டால் நீளத்தைக் குறைத்து சரி செய்து கொள்ளலாம்.

9.3.2. பட்டை வகைகள் (Types of Belt)

இரப்பர், தோல், நூல் போன்றவற்றால் வார்ப்பு செய்யப்பட்டு கம்பியால் ஆன கொக்கிகள் மற்றும் போல்ட், நட் மூலம் பட்டையின் இரு முனைகளும் இணைக்கப்பட்டிருக்கும்.

குறுக்கு வெட்டு முகப்பைப் பொறுத்து, செவ்வக வடிவமாகவோ, வட்ட வடிவமாகவோ, வெட்டப்பட்ட கூம்பு வடிவமாகவோ இருக்கும். பட்டைக்கும் உருளைக்கும் இடையே ஏற்படும் பிடிப்புத் தன்மையால் (Grip) சுழலும் சக்தி கடத்தப்படுகிறது.

சுழலும் சக்தியைக் கடத்த கீழ்கண்ட வகையிலான பட்டைகள் பயன்படுத்தப்படுகிறது.

1. தட்டை வடிவ பட்டை(Flat Belt)
2. V–வடிவ பட்டை (V–Belt)

9.3.3. பட்டை சுழலும் வேகத்தின் விகிதம்

வேக விகிதம் என்பது இயங்கும் உருளை, குறிப்பிட்ட நேரத்தில் சுழலும் சுற்றுகளின் எண்ணிக்கைக்கும், இயக்கப்படும் உருளை, அதே நேரத்தில் சுழலும் சுற்றுகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கும்.

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 123 28-04-2022 15:33:24

D1, D2 என்பவை இரு உருளைகளின் விட்டங்கள் எனவும், N1, N2 என்பவை முறையே அவற்றின் வேகம் என கொண்டால்



பட்டை சுழலும் வேகத்தின் விகிதம்

$$\text{வேக விகிதம்} = \frac{N_2}{N_1} = \frac{D_1}{D_2}$$

வேகவிகிதம் என்பது பட்டையின் தடிமனைப்பொருத்தும், வேக வழுக்கலைப் பொருத்தும் மாறுபடும். அவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். உருளை அல்லது அச்சின் வேகத்தை ஒரு நிமிடத்தில் சுற்றும் சுற்றுகளின் எண்ணிக்கையை வைத்து RPM (Revolution Per Minute) குறிப்பிட வேண்டும். பட்டை மூலம்

இணைக்கப்பட்ட இரு அச்சுகளின் தனித்தனி வேகத்தையும், விட்டத்தையும் பெருக்கினால் வரும் எண் சமமாக இருக்கும்.

எனவே, $D_1 N_1 = D_2 N_2$ ஆகும்.

எடுத்துக்காட்டு கணக்கு–1

பட்டை மூலம் இணைக்கப்பட்ட இயக்கும் உருளையின் விட்டம் 360 செ.மீ. இயக்கப்படும் உருளையின் விட்டம் 60 செ.மீ. எனில் வேக விகிதம் என்ன?

N1 என்பது இயங்கும் உருளையின் வேகம் N2 என்பது இயக்கப்படும் உருளையின் வேகம்

D1 என்பது இயங்கும் உருளையின் விட்டம் = 360 செ.மீ

D2 என்பது இயக்கப்படும் உருளையின் விட்டம் = 60 செ.மீ

$$\text{வேக விகிதம்} = \frac{N_2}{N_1} = \frac{D_1}{D_2} = \frac{6}{1} = \frac{360}{60} = 6.:1$$

வேக விகிதம்= 6:1

எடுத்துக்காட்டு கணக்கு–2

500மி.மீ.,250மி.மீ., விட்டமுள்ள இருசக்கரங்கள் நேர் பட்டை மூலம் இயக்கப்படுகிறது. சிறிய விட்டமுள்ள உருளையின் வேகம் நிமிடத்திற்கு வலஞ்சுழியாக 400 சுற்றுகள் (RPM) சுற்றினால் பெரிய சக்கரத்தின் வேகம் என்ன? சுழலும் திசை என்ன?

$D_1 = 500$

$D_2 = 250$

$N_1 = 400$ rpm

$N_2 = ?$

$D_1 N_1 = D_2 N_2$

$$N_2 = \frac{D_1 N_1}{D_2}$$

$$= \frac{500 \times 400}{250}$$

$N_2 = 800$ rpm சுழலும் திசை வலஞ்சுழியாகும்

எடுத்துக்காட்டு கணக்கு – 3:

பெல்ட் மூலம் இணைக்கப்பட்ட இரு அச்சுக்களில் 200 மி.மீ. விட்டமுடைய உருளை பொருத்தப்பட்டுள்ளது. இது 3000 RPM வேகத்தில் இடஞ்சுழியாக சுழல்கிறது. அடுத்த அச்சு வலஞ்சுழியாக 1500 RPM வேகத்தில் சுழல வேண்டுமானால், என்ன அளவு விட்டமுள்ள உருளை அதில் பொருத்தப்பட வேண்டும். பெல்ட் எம்முறையில் இணைக்கப்பட வேண்டும்.

$D_1 = 200$

$D_2 = ?$

$N_1 = 3000$ RPM

$N_2 = 1500$ RPM

$D_1 N_1 = D_2 N_2$

$$D_2 = \frac{D_1 N_1}{N_2}$$

$$= \frac{200 \times 3000}{1500}$$

$= 200 \times 2$

$D_2 = 400$ mm

குறுக்கிடும் பெல்ட் முறையில் இணைக்கப்பட வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 124 28-04-2022 15:34:18

9.3.4. பட்டை வழுக்கல்

